# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்

நீதிமொழிகள் 28:20



THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD

May - June 2026
Volume : 66

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 3

## AGVBS ஆசிரியர் பயிற்சிகள்






## 100 மணி நேர ஜெபம் – மதுரை பிராந்தியம்




## திருவள்ளூர் மண்டல ஆண்கள் ஐக்கிய முகாம்




## Ministry Motivation Workshop-Chennai




## ஆசிரியரிடமிருந்து........!



### உண்மையுள்ள மனுஷன்

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்

இன்று உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள் (சங்கீதம் 12:1) என்றும் உண்மையுள்ள மனுஷனை கண்டுபிடிப்பவன் யார்? என்றும் வேதம் கூறுகிறது (நீதி.20:6). “உண்மை” *(faithfulness)* என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை குணங்களில் ஒன்றாகும். உண்மையில்லாமல் தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெற முடியாது. உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்று வேதம் கூறுகிறது (நீதி.28:20).

‘உண்மை’ என்கிற வார்த்தைக்கு எமுனா *(emunah)* என்ற எபிரெய பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எமுனா என்பதற்கு நிலைத்திருத்தல், நம்பிக்கைக்குரியவராக இருத்தல், தீர்மானங்களில் உறுதியாக இருத்தல், சொன்ன வாக்கைக் காப்பாற்றுதல் என்று பல அர்த்தங்கள் உண்டு. நம்முடைய தேவன் உண்மையுள்ளவர் (புலம்பல் 3:23). அவர் உண்மையின் வடிவமாகவும் அவருடைய வார்த்தைகள் உண்மையின் வெளிப்பாடுகளாகவும் இருக்கின்றன (1கொரி.10:13; 1தெச.5:23). இந்த உண்மை *(faithfulness)* என்கிற கர்த்தருடைய குணாதிசயம் அவருடைய பிள்ளைகளாகிய நமக்குள்ளும் காணப்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் உண்மையாயிருக்க வேண்டிய சில பகுதிகளை இங்கு தியானிப்போம்.

#### 1. குடும்பத்திற்கு உண்மையாயிருங்கள்
#### Be faithful to your FAMILY

முதலாவது, உங்கள் வாழ்க்கைத் துணையாகிய கணவன்-மனைவிக்கு *(Companion)* உண்மையாயிருங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் திறந்த உள்ளத்தோடு இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் நல்ல துணையாகவும், பெலனாகவும் இருக்க வேண்டும். உன் உடன்படிக்கையின் மனைவி / கணவனுக்கு துரோகம் பண்ணாதே என்று கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 2:14). பாலியல் வாழ்வில் உண்மையும், உத்தமமும் மிகவும் அவசியம். திருமண வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட எந்த முறையற்ற உறவுக்கும் யோசேப்பை போல் விலகி வாழுங்கள் (ஆதி.39:9). விபச்சாரம், மற்றவருக்கு தெரியாமல் ஆபாச படங்கள் பார்ப்பது, தவறான உறவு போன்றவைகளை தேவன் வெறுக்கிறார்.

இரண்டாவது, உங்கள் பிள்ளைகளிடம் *(Children)* உண்மையாயிருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

மாதிரியுள்ள தாயாக, தகப்பனாக செயல்படுங்கள். பிள்ளைகளிடம் நல்ல தரமான, நேரம் செலவழியுங்கள். பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். பிள்ளைகளோடு சேர்ந்தும் ஜெபியுங்கள். இன்று அநேக குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளை நல்ல ஆவிக்குரிய நிலையில் வளர்க்க பிரயாசப்படுவதில்லை. உங்கள் பிள்ளைகளைக் குறித்து தேவன் கணக்கு கேட்பார். அவர்களைப் பரலோகம் கொண்டு சேர்ப்பது பெற்றோராகிய உங்கள் பொறுப்பு. ஏலியைப் போலிராமல் ஆபிரகாமை போலிருங்கள் (வாசியுங்கள் 1 சாமுவேல் 2:12;3:13; ஆதியாகமம் 18:19). அதேப்போல் பிள்ளைகளும் தங்கள் பெற்றோர்களுக்கு எல்லா காரியங்களிலும் உண்மையாக இருக்க வேண்டும் (கொலோ. 3:20).

## 2). பணத்தில் உண்மையாயிருங்கள்<br>Be faithful in your FINANCES

அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? என்று இயேசு கூறினார் (லூக்கா 16:11). பணத்தில் உண்மையாயிராவிட்டால் தேவன் நமக்கு ஆவிக்குரிய கிருபைகள், வரங்கள், வல்லமைகள், வேத ஞானம், ஜெபத்திற்கு பதில் ஆகியவற்றை தருவது எப்படி?

**பணத்தை சம்பாதிப்பதில் உண்மை :** பணத்தை சம்பாதிப்பதில் தேவனுடைய பிள்ளைகள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைத்து சம்பாதிக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது. “வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம், கைப்பாடாய் சேர்க்கிறவனோ விருத்தியடைவான் (நீதிமொழிகள் 13:11)”. கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது (நீதிமொழிகள் 11:1; 20:10,23). சுமுத்திரையான நிறைக்கல்லோ அவருக்குப் பிரியம் (ஓசியா 12:7; மீகா 6:11; உபாகமம் 25:15). நேர்மையற்ற குறுக்கு வழியில் பணம் ஈட்ட முயற்சிப்பது, அநியாய வட்டி வாங்குவது, இலஞ்சம் வாங்குவது, திருட்டு போன்ற காரியங்களில் தேவப்பிள்ளைகள் ஈடுபடக்கூடாது (நீதிமொழிகள் 28:8; சங்கீதம் 15:5; நீதிமொழிகள் 15:27;16:8). மேலும் உங்கள் வேலை ஸ்தலத்தில் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு வேலை செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடு மனப்பூர்வமாகவும், உண்மையாகவும் பணி செய்யுங்கள் (எபேசியர் 6:6; கொலோசெயர் 3:22).

**பணத்தை செலவழிப்பதில் உண்மை :** பணக்காரியங்களில் நாம் திறந்த புத்தகமாக ***(Transparent)*** இருக்க வேண்டும். பணத்தை செலவழிப்பதில் உண்மை தேவை. தேவன் தந்த வருமானத்திற்குள் செலவு செய்ய பிரயாசப்பட வேண்டும். வீண் செலவுகள், கடன் வாங்குதல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் (நீதிமொழிகள் 22:7). போதும் என்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் (1 தீமோத்தேயு 6:6; எபிரெயர் 13:5). தேவன் உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திப்பார் என்று விசுவாசியுங்கள் (பிலிப்பியர் 4:19). ஆம், உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.

## 3). உங்கள் திருச்சபைக்கு உண்மையாயிருங்கள்<br>Be faithful to your FELLOWSHIP

விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்கு உண்மையாய் இருக்க வேண்டும். ஸ்தல சபை ஆராதனையில் தவறாமல் நேரத்திற்குச் சென்று

கலந்து கொள்ள வேண்டும் (எபிரெயர் 10:25; அப்.2:42). திருச்சபைப் பணிகளுக்காகவும் தேவ ராஜ்யத்தின் விரிவுக்காகவும் உங்கள் தசமபாகங்கள் மற்றும் காணிக்கைகளை ஒழுங்காக செலுத்த வேண்டும் (மல்.3:10; லேவியராகமம் 27:30; நீதிமொழிகள் 3:9,10). உங்கள் தசமபாகங்களை பல ஊழியங்களுக்கு பிரித்துக் கொடுப்பது முறையானது அல்ல. நீங்கள் அங்கம் வகிக்கும், உங்களை விசாரிக்கும் ஸ்தல சபைக்குத் தான் அது கொடுக்கப்பட வேண்டும். மீதமுள்ள 90% பணத்தில் நீங்கள் பல நல்ல ஆவிக்குரிய ஊழியங்களை தாங்கலாம். சபையில் ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள் (யாக்கோபு 4:11). ஒற்றுமையைக் காத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:3).

**உங்கள் ஸ்தல சபை போதகருக்கு உண்மையாயிருங்கள் :** அவருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து அடங்கி நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபிரெயர் 13:17). உங்கள் ஸ்தல சபை போதகரோடு இணைந்து தேவன் உங்கள் சபைக்கு அவர் மூலம் தந்த தரிசனத்தை நிறைவேற்ற உண்மையாயிருங்கள். உங்கள் தாலந்துகளை கண்டுபிடித்து அவைகளை தேவ ராஜ்யத்தின் விரிவுக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் உண்மையாக பயன்படுத்துங்கள் (மத்.25:14-23).

ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதிலும், சபை ஊழியங்களில் பங்கு பெறுவதிலும் உண்மையாயிருங்கள். அப்பொழுது ஒரு நாள் இயேசு, 'நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய் உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன்' என்று உங்களைப் பார்த்துக் கூறி உங்களை ஆசீர்வதிப்பார்.

## 4). உங்கள் விசுவாசத்திற்கு உண்மையாயிருங்கள்
## Be faithful to your FAITH

கடைசி நாட்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவர்கள் (1 தீமோ.4:1). ஆகவே பெற்றோரும் ஊழியர்களும் ஆரோக்கியமான வேத சத்தியங்களை பிள்ளைகளுக்கும், குடும்பத்திற்கும், விசுவாசிகளுக்கும் உண்மையாய் போதிக்க வேண்டும் (உபாகமம் 11:20; 2தீமோத்தேயு 2:15). இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் சத்தியத்தில் உறுதியான நம்பிக்கை ***(convictions)*** இல்லாதவர்களாய் இருப்பதை காண்கிறோம். வேதத்தின் முக்கிய அடிப்படை சத்தியங்களை அறியாமலிருக்கிறார்கள்.

நாம் கற்று அறிந்திருக்கிற வேண்டிய சில அடிப்படை வேத சத்தியங்களாவன-வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டவை, திரித்துவ தேவன், கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு, இயேசுவின் தெய்வீகம், இயேசுவின் பரிசுத்த வாழ்வு, இயேசுவின் பிராயச்சித்த பலி, இயேசுவின் உயிர்த்தெழுதல், இயேசுவின் இரண்டாம் வருகை, பாவிகளின் நரக தண்டனை, கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்றவை. இந்த அடிப்படை சத்தியங்களை விசுவாசிப்பதில் உண்மையாயிருந்து தேவனுக்கு சாட்சியாயிருக்க வேண்டும். துர் உபதேசங்களுக்கும், கட்டுக்கதைகளுக்கும் விலகி சத்தியத்தில் உறுதியாய் நிற்க உண்மையாயிருங்கள் (2 தீமோத்தேயு 4:4; கொலோசெயர் 2:4-6). இயேசு சீக்கிரம் வருகிறார்!.

## 5). மரணபரியந்தம் உண்மையாயிருங்கள்
## Be faithful to the FINISH

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் என்று இயேசு கூறுகிறார் (வெளி.2:10). நன்றாக ஆரம்பிப்பது முக்கியம். ஆனால் நன்றாக முடிப்பதுதான்அதைவிட அதிக முக்கியம் (2 தீமோ.4:7; பிரசங்கி 7:8). வாழ்க்கையின் கஷ்டமான நேரங்களிலும் காத்திருக்கும் வேளைகளிலும் உண்மையாக இருக்க வேண்டும். யோபு, யோசேப்பு, தாவீது, தானியேல், பவுல் போன்ற தேவ மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் நேரிட்ட ஏமாற்றங்கள் கஷ்டங்கள் தாமதங்கள் அனைத்திலும் கர்த்தரை உறுதியாக பற்றிக்கொண்டு உண்மையாக இருந்தார்கள். கிரேக்க நாட்டில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகள் விசேஷமானவைகள். அதில் ஓட்டப்பந்தயத்தில் முதலாவது வந்தவர் வெற்றிப் பெற்றவர் அல்ல. ஆனால் தன்னுடைய கையிலுள்ள தீவெட்டியை *(torch)* அணையாமல் கொண்டு வந்து முடிப்பவர்களே வெற்றிப்பெற்றதாக அறிவிக்கப்படுவர். நாமும் நம்முடைய கையிலுள்ள 'உண்மை' என்னும் தீவெட்டியை நம்முடைய மரணம் அல்லது கிறிஸ்துவின் வருகைப் பரியந்தம் அணையாமல் காத்துக் கொள்ள பிரயாசப்படுவோம். கர்த்தர் தாமே நமக்கு ஜீவ கிரீடத்தை தருவாராக!

கடைசியாக சகோதரரே, சின்ன சின்ன காரியங்களில் உண்மையாயிருங்கள் (Be faithful in SMALL things) (தானியேல் 6:4). அந்தரங்க காரியங்களில் உண்மையாயிருங்கள் (Be faithful in SECRET things). ஒருவரும் காணாத நேரத்தில், இடங்களில் நீங்கள் செய்யும் காரியங்களில் கர்த்தருக்கு பயந்து உண்மையாயிருங்கள் (ஆதி.39:9). ஆவிக்குரிய காரியங்களிலும் உண்மையாயிருங்கள் (Be faithful in SACRED things). தேவனோடு அனுதினமும் ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும் உண்மையாயிருங்கள் (தானியேல் 6:10). ஆம், மேலும் வேதம் சொல்லுகிறபடி, இருதயத்தில் உண்மை (நெகேமியா 9:8), கொஞ்சத்தில் உண்மை (லூக்கா 16:10;19:17) மற்றும் எங்கும் உண்மை (எபிரெயர் 3:2). உடையவர்களாய் நீங்கள் இருக்கும்போது தேவன் நிச்சயம் உங்களை பரிபூரணமாக தமது வாக்கின்படி ஆசீர்வதிப்பார் (நீதி.28:20).

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**
30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664



# உற்று கவனித்தல்-Attentive Listening

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**
Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary - The Thamizh Pradhesa Assemblies of God

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, பரிபூரண ஜீவன் வாசகர்களாகிய, நம்முடைய விசுவாசிகள் யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**"உற்று கவனித்தல்" (Attentive Listening)** என்பது நம்முடைய குடும்ப வாழ்க்கையில் பிரதானமாக கடைபிடிக்க வேண்டிய ஒன்று. ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல்போவது என்பது குடும்ப பிரச்சனையின் தீவிரங்களில் ஒன்று. ஆனால் அதற்கு முன்பு பேசுவதை கவனிக்காமல் விடுவதுதான் ஆரம்பமாகி, வளர்ந்து, பெரிய பிரச்சனையாக மாறுகிறது.

“ஆகையால் என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும்...” (யாக்.1:19).

Everyone must be quick to listen, but slow to speak...

“‘காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்” (நீதி.18:13).

Listen before you speak, for to speak before you've heard the facts will bring humiliation (Proverbs 18:13 TPT).

உற்று கவனித்தல் என்பது சாதாரணமாக கேட்பதைவிட வித்தியாசமானது. கேட்டலில் மற்றவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறோம். ஆனால் கவனித்தலில் மற்றவர்களை புரிந்துகொள்கிறோம். குடும்ப உறவுகள் மேம்பட. ஒருவரை ஒருவர் ஆழமாக புரிந்துகொள்ள, அன்பை வெளிப்படுத்த, உற்றுக்கவனித்தல் மிகவும் பிரதானமானது. ஒருசில நடைமுறை குறிப்புகளை கீழே தருகிறேன். படியுங்கள், ஒவ்வொன்றாக செயல்படுத்துங்கள்.

### 1. Capture full focus (முழு கவனத்தை பெறுங்கள்)

கணவனோ, மனைவியோ ஒருவரோரொருவர் பேசும்போது முழு கவனத்தையும் அவர்கள் பக்கமாக திருப்ப வேண்டும். கண்களையும், முகத்தையும் பார்த்து பேசவோ, கேட்கவோ வேண்டும். Phone மற்றும் TV போன்ற திசைதிருப்பும் காரியங்களை தள்ளி வைக்க வேண்டும்.

### 2. Cultivate Openness (திறந்த மனதை வளருங்கள்)

பொதுவாக திருமண உறவுகள் ஆண்டுகள் செல்லச்செல்ல கவனிப்பதும், புரிந்துகொள்வதும் தவறாக மாறுவதற்கு அநேக வாய்ப்புகள் உண்டு. இதைத் தானே சொல்ல போகிறார்(ள்) என்ற எண்ணம் முழுமையான கவனித்தலை தடுக்கிறது. பேசுவதை வைத்து மற்றவரை குற்றப்படுத்தி தீர்ப்பு சொல்லாமல், ஒவ்வொரு வார்த்தையையும் உள்வாங்க பழக வேண்டும். அதற்கு திறந்த மனதோடு கவனிக்கும் பழக்கத்தை பெருக்க வேண்டும். (Shun Judgements & Soak in every word openly).

### 3. Control Tongue (நாவை கட்டுப்படுத்துங்கள்)

"கேட்கிறதற்கு தீவிரமாயும்..." என்ற வேதவசனம் கூறுகிற ஆலோசனை என்னவென்றால், பிறர் பேசுவதை உற்று கவனிக்க வேண்டும், பேசிமுடிக்கும் முன்பே தேவையில்லாததை பேசி பிரச்சனையை பெரிதாக்கக்கூடாது என்பது தான். கவனித்தலில் வளருவதற்கு நாவை கட்டுப்படுத்தும் பயிற்சி மிகவும் முக்கியமானது.

### 4. Confirm meaning (அர்த்தத்தை உறுதிபடுத்துங்கள்)

கணவனோ / மனைவியோ பேசுவதை உங்களுடைய வார்த்தையில் விளங்கிக் கொண்டும், தெளிவில்லாதவைகளை, குழப்பமானவைகளை, புரிந்துகொள்ள முடியாதவைகளை உடனடியாக கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். அரைகுறையாக கவனித்து, பதில்சொல்வது எப்போதும் ஆபத்தானது. வெறும் வார்த்தைகளை மட்டும் அல்ல, வார்த்தைகளுக்கு பின்புள்ள உணர்வுகளையும் புரிந்துகொள்ள முயற்சியுங்கள்.

### 5. Convey Interest (ஆர்வத்தைக் காட்டுங்கள்)

அநேக கணவர்கள், மனைவிகள் பேசுகிறதை கவனிக்கிறதில்லை மற்றும் எந்தவித உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறதில்லை. முகபாவனைகளில் (facial expressions) உடல் அசைவுகளில் (body language) ஒருசில வார்த்தைகளில் நீங்கள் ஆர்வமாக கவனிக்கிறீர்கள் என்பதை உணர்த்த வேண்டும். உங்களுடைய "ஆமாம்" (yes) என்ற வார்த்தையானது, உன்னைப் புரிந்துகொண்டு நீ பேசுகிறதை கவனிக்கிறேன், உன்னை முக்கியப்படுத்துகிறேன் என்பதை வெளிப்படுத்தும்.

### 6.Catch Feelings (உணர்வுகளை புரிந்துகொள்ளுங்கள்)

உற்றுக் கவனித்தலில் மிகவும் முக்கியமானது, உணர்வுகளை புரிந்துகொள்ளுதல். மனித வார்த்தைகளில் உணர்வுகளும் வெளிப்படும். உணர்வுகளை புரிந்துகொள்ள தவறும்போது, வார்த்தைகள் தவறான அர்த்தத்தை கொடுத்துவிடும். ஒருவர் சத்தத்தை உயர்த்தும்போது கோபப்படுகிறார்கள் என்று எடுத்துக் கொள்வதைவிட, அந்த விஷயத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றே புரிந்துகொள்ள வேண்டும். உணர்வுகளை புரிந்துகொள்ள முயற்சியுங்கள்.

### 7.Cherish Silence (அமைதியை விரும்புங்கள்)

ஒருவர் பேசும்போது, இன்னொருவர் உடனுக்குடன் பதில் கொடுக்கும்போதுதான், பிரச்சனை பெரிதாகி, பிரிவினைவரை போகிறது. ஒருவர் அமைதியாக இருந்தால். நிறைய பிரச்சனைகளை தவிர்த்துவிடலாம் அமைதியாக இருக்கும்போது தான், மற்றவர்களுடைய வலிகள், வேதனைகள், பிரச்சனைகள் புரிய ஆரம்பிக்கும். கவனித்தலில் வளர ஆரம்பிப்போம். இருவரும் ஒரே நேரத்தில் கோபப்படக்கூடாது, சத்தமிடக்கூடாது என்பதை ஒரு கொள்கையாகவே வைத்திருங்கள்.

### 8.Care Kindly (இரக்கமாக கவனியுங்கள்)

மென்மையை கடைபிடியுங்கள், கோபப்படும்போது நிதானம் இழப்போம், வார்த்தைகள் தவறாக தெரியும், சூழ்நிலைகள் பிரச்சனைகளாக மாறும் ஆகவே

இரக்கமாக, சாந்தமாக கவனிக்க, பழகுங்கள். நிச்சயம் நிறைய மாற்றங்களை குடும்பத்தில் கவனிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வருகிற சூழ்நிலைகளில் கூட மென்மையாக பதில் அளியுங்கள்.

### 9.Cultivate Questions (கேள்விகள் கேளுங்கள்)

இன்னும் தெளிவாக புரிந்துகொள்ள சில கேள்விகள் கேட்க வேண்டும். கேள்விகள் கேட்கும்போது, நீங்கள் கவனித்து வருகிறீர்கள் என்பது மாத்திரமல்ல, புரிந்துகொள்ள முயற்சிக்கிறீர்கள் என்பது தெரியவரும். உணர்வுகளை புரிந்துகொள்ளக்கூடிய ஆறுதல் தரக்கூடிய, இன்னும் நெருக்கத்தை தூண்டுகிற கேள்விகளை கேளுங்கள்.

### 10.Continue Support (கவனிப்பை தொடருங்கள்)

திருமண உறவு என்பது, உணர்வுகளில் அவ்வப்போது இணைவது அல்ல, எப்போதும் இணைந்திருப்பது. ஆகவே, எல்லா தருணங்களிலும் கவனித்தலை தொடருங்கள். பேசப்பட்ட வார்த்தைகள் பேசப்படாத உணர்வுகள், மறைந்திருக்கும் எண்ணங்கள் என எல்லாவற்றையும் கவனிக்கப் பழகுங்கள்.

உற்றுக் கவனிப்பதலின் மூலம், ஆண்டவர் நம்முடைய குடும்பங்களை ஆழமாக கட்டுவாராக பிறருக்கும் பிரயோஜனமாக மாற்றுவாராக.

---

## தாய்மார்கள் தினம்

மே 10, ஞாயிறு




## தகப்பனார்கள் தினம்

ஜீன் 21, ஞாயிறு




**தமிழ் பிரதேசத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்**




## பெந்தெகொஸ்தே நாள்

மே 24, ஞாயிறு

**திருச்சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்**



# ஒருமைப்பாட்டில் தேறினவர்கள்


## திருமதி. நிர்மலா ஜெயராஜ்

தமிழ் பிரதேச பெண்கள் ஐக்கியம்


"ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், ...நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்'' (யோவான் 17:23).

பிதாவாகிய தேவனோடுள்ள உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும்படியாக நமக்காக இயேசு பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்யும் உருக்கமான ஜெபத்தை யோவான் 17ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இயேசு பிதாவாகிய தேவனோடு ஒன்றாக இருந்தபடியால், மற்றவர்களுடைய நலனுக்காக, அவரைப் போல ஒருமைப்பாட்டில் தேறினவர்களாக மாறுவதற்காக நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஒருமைப்பாடு தேவ மகிமையை வெளிப்படுத்தும் "எனக்குத் தந்த மகிமையைக் கொடுத்தேன்". அவருடைய மகிமையினால் நிரப்பப்படும்போது தேவனுடைய சர்வ மகிமையையும், அழகையும், குணாதிசயங்களையும் அவருடைய பிரசன்னத்தையும் அனுபவிக்க முடியும்.

இயேசுவும், பிதாவாகிய தேவனும் ஒன்றாக இருப்பதை பல சந்தர்ப்பங்களில் பார்த்த சீஷர்கள் அவரைப் போல மாறவும், அவரோடு கூட இருக்கும் வாஞ்சையினால் நிரப்பப்பட்டார்கள். உறவுகளில் நிலைத்திருக்கச் செய்யும் ஒருமைப்பாடு. தங்களையே முழுவதுமாய் அர்ப்பணிக்கத் தூண்டும் ஒருமைப்பாடு. அவரோடு கூட ஒருமித்து நடக்கிறவர்களுக்குத் தம்முடைய அளவற்ற வல்லமையை அளவில்லாமல் கொடுக்கிறார். யோவான் 17:6 உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். (8) "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" அவரோடு ஒருமித்த அனுபவங்கள் இருக்குமென்றால் பல குணாதிசயங்களில் தேறினவர்களாய் நாம் மாற முடியும்.

### அன்பில் தேறினவர்கள்

ஒருமைப்பாட்டில் தேறினவர்கள் கிறிஸ்துவின் அன்பில் தேறினவர் களாயிருக்க வேண்டும் "பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்" (கொலோ. 3:14).

"கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்திலும் நல் மனச் சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" (1 தீமோ. 1:5).

ஒருமைப்பாட்டின் அஸ்திபாரம் அன்பில் இருக்கிறது. உண்மையுள்ள இருதயத்தால் தேவனை சேவிக்கும் வைராக்கியம். வெளிப்பிரகாரமான வாழ்க்கையும் உள்ளான இருதயத்தின் நினைவுகளும் நம்முடைய தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளதாயிருக்க வேண்டும். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்

பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்". நல்மனச்சாட்சியோடுள்ள அன்பு உள்ளவர்கள் பயமில்லாமல், குற்ற உணர்வில்லாமல், பகைமையில்லாத நல்ல மனச்சாட்சியுடன் இருக்க வேண்டும். ''பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்". (2கொரி.7:1). தேவனுக்கு முன்பாக குற்றமற்ற மனச்சாட்சியோடு நிற்க முடிந்தால், மனிதர்களுக்கு முன்பாகவும் அப்பழுக்கு இல்லாதவர்களாக நிற்க முடியும்.

மாயமற்ற விசுவாசத்தோடு கூடிய அன்பில் தேறினவர்களாக மாற தேவன் உதவி செய்வாராக. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். இப்படிப்பட்ட அன்பில் பெருகப் பிரயாசப்படுவோம்.

அன்பில் தேறினவர்கள், தேவனோடு தரித்திருக்கும் அனுபவம் உடையவர்கள். உலகத்தோடு வேறுபட்ட நிலை, தேவனுடைய ஆளுகைக்கு கீழ்ப்படிந்து தேவ சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக மாற வேண்டும்.

## கிருபையில் தேறினவர்கள்

1 தீமோ.1:14 "நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாக பெருகிற்று". இயேசு கிறிஸ்துவின் ஐசுவரியத்தின்படி அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மிடத்தில் பெருகப்பண்ணினார் (எபே.17:8).

அவருடைய கிருபை நம்மை திறம்பட வேலை செய்யத் தூண்டுகிறது. நாம் எதைச் செய்தாலும் மனப்பூர்வமாய் திறம்பட கர்த்தருக்காக செய்யும்போது அதைக் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். நம்முடைய செயல்திறனை அவர் உயர்த்துகிறார். அவரைச் சார்ந்து கொள்ளும்போது அவருடைய கிருபையின் பெருக்கத்தை நாம் அனுபவிக்க முடியம்.

## தேவனை அறிகிற அறிவில் தேறினவர்கள்

1 பேதுரு 1:3-8 "தம்முடைய காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் திவ்விய வல்லமையானது தந்தருளினது". அவரை அறிகிற அறிவினாலே தேவனுடைய மகா மேன்மையின் அருமையான வாக்குத்தத்தங்கள், அவருடைய பண்புகளாகிய விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் அன்பு யாவும் நமக்குக் கூட்டி வழங்கப்பட்டிருக்கிறது.

அவரை அறிகிற அறிவினால் தேவனுடைய பிள்ளைகள் அவருக்காக பலத்த காரியங்களைச் செய்தார்கள். எல்லாவற்றையும் குப்பையாக நஷ்டமாக எண்ணி அவரை ஆசையாகத் தொடர கிருபை செய்தது. அவரை அறிகிற அறிவில் தேறினவர்களாய் மாறும்போது அவருக்குள் இருக்கிற ஞானம் அறிவாகிய பொக்கிஷங்களைப் பெற்றுக் கொள்கிறோம்.

## தேவப் பிரசன்னத்தில் தேறினவர்கள்

தேவப்பிரசன்னத்தை வாஞ்சிக்கிறவர்களுக்கும், தரித்திருப்பவர்களுக்கும் தேவன் தம்மை பூரணமாய் வெளிப்படுத்துகிறார். உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் (யாத்.33:18).

அவருடைய பிரசன்னம் முன் செல்லாவிட்டால் மேன்மை இல்லை என்பதை மோசே நன்றாக அறிந்திருந்தார். யாத் 33:15-ல் “உம்முடைய சமுகம் என்னோடே கூட செல்லாமாற் போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும் என்றான்”. அவருடைய பிரசன்னம் நம்மோடு கூட வந்தால் மட்டுமே நாம் விரும்புகிற வெற்றியும் மேன்மையும் நமக்கு உரியதாகும். வெறும் சாதனைகளை மட்டும் சார்ந்தது கிறிஸ்தவ வாழ்க்கையல்ல.

பிரதான ஆசாரியர்களும், பரிசேயர்களும், பேதுருவும், யோவானும் சீஷர்களும் இயேசுவோடு இருந்தவர்கள் என்று அவருடைய பிரசன்னத்தின் மகிமையினால் கண்டு கொண்டார்கள். முன்பு அவர்கள் கல்லாதவர்கள், திறமையற்றவர்கள், கோழைகள். ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்ற பிற்பாடு சீஷர்களின் தைரியம், ஞானம், ஆவியானவரின் அற்புத அடையாளங்கள் அவர்களை ஆச்சரியப்படுத்திற்று. தேவனுடைய பிரசன்னம் சாதாரண மனிதர்களை அசாதாரணமானவர்களாக மாற்றும் தேர்ச்சியைத் தருகிறது. அவருடைய பிரசன்னத்தில் தேறினவர்களாய் இருக்கும்போது அவர் நமக்கு தரிசனத்தையும், தெளிவையும், கர்த்தருடைய பிரசன்னத்தில் பொறுமையுடன் காத்திருக்கிற கிருபையையும் கற்றுத் தருகிறார். நம்முடைய குழப்பங்கள் மறைந்து, தெளிவையும், பலவீனங்கள் மாறி பலத்தையும், மதீயினம் மாறி ஞானவான்களாக மாற கர்த்தர் நமக்கு உதவி செய்கிறார்.

தேவபிரசன்னத்தில் பெருகும்போது கர்த்தர் நம்மோடு உடன்படிக்கை செய்கிறார். எந்த ஜாதிகளிடத்திலும் செய்யாத பயங்கரமான காரியங்களை அவர் செய்ய வல்லவராயிருக்கிறார். ஒருமைப்பாடு நம்மை வல்லமையடையச் செய்யும். தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்ய நம்மை சக்திப்படுத்தும். பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிற வல்லமையின் போராயுதங்கள் “மாம்சத்துக்கேற்றவை களாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குவதற்கு தேவ பலமுள்ளவைகளா யிருக்கிறது”. இந்த தேவ பிரசன்னத்தில் வல்லமையினாலே மனித அறிவு, திறமைகள், செல்வம், புத்தி, சொல்லாற்றல், கவர்ச்சி என்பவைகளுக்கு மேலாக உன்னதத்தில் உயர்ந்து நிற்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையை நமக்கு தேவன் கொடுக்கிறார்.

## பாடுகளில் தேறினவர்கள்

பிலி.3:10 “இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும் ....மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாக மாற வேண்டும்”.

“இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல” (ரோமர் 8:18).

2கொரி.4:8,9 “நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை, துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை”.

பாடுகளினூடே மீட்பரைத் தரிசிக்கத் தேவன் பெலன் தருவாராக. "அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" பாடுகள் நம்மை ஜெயங் கொள்ளுகிறவர்களாக மாற்றுகிறது.

"உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே". பாடுகள் நம்மை அவரோடு ஆளுகை செய்யக் கிருபையளிக்கிறது.

## கொடுப்பதில் தேறினவர்கள்

பிதாவாகிய தேவன் தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர். அவரோடு கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? நம்மை பரிபூரணமாய் கொடுக்க தேவன் எதிர்பார்க்கிறார். அவருடைய கொடுக்கும் தரத்திற்கு ஒப்பாக தம்முடைய பிள்ளைகள் உதாரத்துவமாக தங்களையே கொடுக்க தேவன் எதிர்பார்க்கிறார். "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல உற்சாகமாய் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்". சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். நம்முடைய கையில இருக்கும் சிறியதாயினும் பெரியதாயினும் உற்சாகமாய், மனப்பூர்வமாய் கொடுப்போ மென்றால் அதை தேவன் பெருகச் செய்வார்.

ஒரு சிறுவன் கொடுத்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் ஐயாயிரம் புருஷருக்கும், திரளான ஜனங்களுக்கு ஆசீர்வதித்து கொடுத்த இயேசு நம்முடைய சிறிய காணிக்கையையும் அவர் ஏற்றுக்கொண்டு, மகா திரளாய் பெருகச் செய்யும் வல்லமையை வெளிப்படுத்துகிறார். அமுக்கி குலுக்கி மடியிலே அளந்து போடுவார்கள். தேவ ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக, எளியவர்களின் தேவைக்காக, சபைகளின் தேவைகளுக்காக தாராளமாக, ஏராளமாக, உதாரத்துவமாக, தியாகத்தோடு கொடுப்பதில் தேறினவர்களாக மாற கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

கிறிஸ்து நமக்கு போதித்தப்படியே ஒருமைப்பாட்டில் தேறினவர்களாக நாம் வளருவோம். விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும், அனுசரித்து வருகிற நற்போதகத்திலும் தேறினவர்களாக இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரராக, போர்ச்சேவகராக இருக்கக் கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக. நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குள் தேறுகிறதை யாவரும் கண்டு கொள்வார்களாக. நாம் ஒருமைப்பாட்டில் தேறுகிறதில் நிலைத்திருப்போமாக. நம்முடைய இரட்சிப்பில், பரிசுத்த ஆவியின் நிறைவில், கிறிஸ்துவின் உறவில், குணாதிசயங்களில், மனிதரோடு உள்ள உறவுகளில், ஊழியத்தில், பரிசுத்தமாகுதலில், ஐக்கியத்தில், பரிந்து பேசுதலில், எல்லா மனிதரின் இரட்சிப்புக்காக ஜெபிக்கும் ஜெபத்தில், வேண்டுதலில் தரித்திருந்து தேறினவர்களாக தேவன் நம்மை வளர்ந்தோங்கச் செய்வாராக.



# மீகா : Micah

புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University,
Asst.Superintendent, The Thamizh Pradhesa Assemblies of God

## மீகா என்ற தீர்க்கதரிசி

நமது வேதாகமத்தில் “சிறிய தீர்க்கதரிசிகள்” என்று அழைக்கப் படுகிறவர்கள் 12 பேர். அவர்களில், மீகா எழுதிய இந்தப் புத்தகம் ஆறாவது புத்தகமாக வருகிறது. இவனது சொந்த ஊர் **’மொரேசா’** என்பதாகும். இது தெற்கு ராஜ்யமாகிய யூதாவிலிருக்கும் ஓர் சிற்றூர். எருசலேமிலிருந்து மேற்கே 40 கி.மீ தொலைவில் பெலிஸ்தியரின் தேச எல்லைக்கருகில் அமைந்திருந்தது. ’காத்’ என்ற பட்டணத்துக்கு அருகாமையில் இது இருந்தபடியால் இவ்வூருக்கு “**மோரேசேத்-காத்**” என்ற பெயருமுண்டு, (1:14). இது ஒரு வியாபார வழித்தடமாயிருந்தது.

இவன் காலத்தில் சமாரியாவும் (வடக்கு ராஜ்யம்) எருசலேமும் (தெற்கு ராஜ்யம்) பாவம் நிறைந்தப் பட்டணங்களாயிருந்தன. அவர்களின் பாவங்களை மீகா கண்டித்து தீர்க்கதரிசனம் உரைத்தான். முழு வடக்கு ராஜ்ய மீறுதலுக்கும் சமாரியாதான் காரணம் என்றும், தெற்கு ராஜ்ய விக்கிரக ஆராதனைக்கு எருசலேம் தான் காரணம் என்றும் உரக்கச் சொன்னான். “கர்த்தருடைய சத்தம் நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறது” என்று எச்சரித்தான், (1:5;6:9).

கர்த்தரையே சார்ந்து நின்று மிகவும் தைரியமுடையவனாய் தனது ஊழியத்தைத் தொடர்ந்தான், (7:7). **‘மீகா’** என்ற பெயருக்கு **‘யெகோவா தேவனைப் போன்றவர் யார்’** என்று அர்த்தம், (7:18). உறுதியும் தெளிவுமான தீர்க்கதரிசன செய்திகளை வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலுக்கும், தெற்கு ராஜ்யமாகிய யூதாவுக்கும் பிரசங்கித்தான்.

## மீகாவின் காலம்

தெற்கு ராஜ்யத்தில் யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய ராஜாக்கள் ஆண்டு வந்த காலத்தில் மீகா ஊழியம் செய்தான். இது கி.மு.750க்கும் 686க்கும் இடைப்பட்ட காலமாகும். மீகாவுக்கு சுமார் 100 ஆண்டுகளுக்குப் பின் தெற்கு ராஜ்யத்தில் ஊழியம் செய்த எரேமியா இவனை மேற்கோள்காட்டி எழுதுகிறான், (எரே.26:17-19).

இவனது காலத்தில் ஏசாயா தெற்கு ராஜ்யத்திலும், ஆமோஸ் வடக்கு ராஜ்யத்திலும் தீர்க்கதரிசனம் உரைத்தனர். மீகாவோ வடக்குக்கும், தெற்குக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தான், (1:1).

இஸ்ரவேலும் அதன் தலைநகராகிய சமாரியாவும் அழிவைக் காணும் என்று சொன்னான் (1:6,7) யூதாவும் அதன் தலைநகராகிய எருசலேமும் அழியும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தான். (மீகா 1:9-16; 3:9-12).

## மீகா தீர்க்கதரிசனம் உரைத்த பின்னணியம்

### உள்நாட்டுப் பின்னணியம்

எருசலேமில் வாழ்ந்து வந்த ஏசாயா அக்கால அரசர்களுக்கும், மக்களுக்கும் கர்த்தருடைய செய்திகளை எடுத்துரைத்தான். ஆனால் அதே காலத்தில்

கிராமப்புறங்களில் ஊழியம் செய்த மீகாவோ, கிராமப்புறங்களில் காணப்பட்ட ஊழல் மலிந்த ஆட்சியைக் கடிந்து எச்சரித்தான். கள்ளத்தீர்க்கதரிசிகளையும், கர்த்தரைவிட்டு விலகி வாழ்ந்த ஆசாரியர்களையும், நேர்மையற்ற வியாபாரிகளையும், லஞ்சம் வாங்கிய நியாயாதிபதிகளையும் எதிர்த்துத் தீர்க்கதரிசனம் உரைத்தான். ஏழைகளுக்கு செய்யப்பட்ட அநீதிகளையும், ஏழைகளை ஒடுக்கி தங்கள் செல்வங்களைப் பெருக்கிக் கொண்ட செல்வந்தர்களையும் கடிந்துக்கொண்டான். பேராசை, ஒழுக்கக்கேடான பாவங்கள், விக்கிரக ஆராதனை ஆகியவற்றை எச்சரித்தான்.

எசேக்கியா மன்னன் காலத்தில் ஒரு மார்க்க எழுப்புதல் ஏற்பட்டது. அதற்கு மீகா பெரிதும் உதவினான், (எரே.26:18; 2இரா.18-20 அதிகாரம்) எனினும் இந்த எழுப்புதல் மக்களிடம் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரவில்லை. மாறாக, ஏழைகள் கொள்ளையிடப்பட்டு பணக்காரர்கள் பெரும்பணக்காரர்களாயினர். மக்கள் கர்த்தருடைய பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கவில்லை.

## சர்வதேசப் பின்னணியம்

அக்கால உலகில் எகிப்தும் அசீரியாவும் யார் பெரியவன் என்று தங்கள் பலத்தை நிரூபித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்குள்ளே பெரும் சண்டைகள் நடந்து வந்தன. யோதாம் ஆட்சிக்கு வந்த காலத்தில் அசீரியா வல்லரசாக பலத்தது. பின்பு, ஆகாஸ் அரசனானபோது சீரியாவும், இஸ்ரவேலும் அசீரியாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அந்த கிளர்ச்சியில் ஆகாஸ் துணை நிற்க வேண்டுமென அவனுக்கு அழுத்தம் கொடுத்தனர், (ஏசா.7 அதி).

இப்படி, பொது அரசியலில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட இஸ்ரவேல் மற்றும் யூதாவின் அரசர்கள் வலுவிழந்து போயினர். அவர்கள் கர்த்தர் பக்கம் நின்று, மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட அவரது பிரமாணங்களின்படி நடக்க வேண்டியதாயிருந்தது. அப்படிச் செய்யாதபடியினால் மீகா அவர்களை கடிந்து எச்சரித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தான்.

## மீகாவின் செய்தியின் சுருக்கம்

இஸ்ரவேல் மற்றும் யூதா தேசங்களின் பாவங்களை பட்டியலிட்ட மீகா, அதனால் தேவகோபாக்கினையும், நியாயத்தீர்ப்பும் அதற்குரிய தண்டனையும் அவர்கள்மேல் வரும் என்றும் எச்சரித்தான். அவன் உரைத்தபடியே கிமு 722-ல் இஸ்ரவேல் அசீரியரால் முறியடிக்கப்பட்டு அவர்கள் சிறைகளாக அசீரியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர், (2இரா. 17 அதி)

கிமு 586-ல் யூதாவும், பாபிலோனியரால் முறியடிக்கப்பட்டு, தெற்கு ராஜ்யம் முழுமையும் பாபிலோனுக்குச் சிறையிருப்பில் சென்றனர். தேசம் 70 ஆண்டுகள் பாழாய்க் கிடந்தது, (2இரா 25-ம் அதிகாரம்; எரே.25:11).

## மீகா புத்தகத்தில் பொருளடக்கம்:

## இப்புத்தகத்தை மூன்று பகுதிகளாகப் பகுக்கலாம்:

1. நீதியுள்ள தேவனுக்கு முன்பாக அநீதியாய் வாழ்ந்த இஸ்ரவேல் மற்றும் யூதா மக்களின் அவலநிலைகள் இப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவர்களது பாவங்களினிமித்தம் தேவகோபாக்கினையும் நியாயத்தீர்ப்பின் அழிவும் வரும் என்றும் சொல்லப்பட்டுள்ளது, (அதி 1-3).
2. பாவிகள் தண்டிக்கப்பட்டுச் சிறையிருப்பில் செல்வர் என்றும், எனினும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் வாழும் ஒரு "சிறுகூட்டத்தினர்" (The Remnant) ஆறுதலடைவர்; அவர்களுக்கு நம்பிக்கையும் உண்டு.

தேவனுடைய வீடு அவர்களுக்காக நிலைப்படுத்தப்படும். மேசியா மூலம் அவர்களுக்கு சமாதானமும் நீதியும் வரும். விக்கிரக ஆராதனை ஒழிந்து தேசம் சுத்திகரிக்கப்படும். ஏழைகள் அநியாயமாய் ஒடுக்கப்படுவது என்றென்றைக்கும் இல்லாமற் போகும் (அதி 4-5).

3. மீகா புத்தகத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களும் ஒரு நீதிமன்றக் காட்சிபோல சித்தரிக்கப்பட்டுள்ளது. தேவன் தமது நியாயத்தை நீதிமன்றத்தில் வைக்கிறார். இஸ்ரவேலருக்கு விரோதமாக தமது வழக்கினை வைக்கிறார். இஸ்ரவேலும் அதற்கு மறுமொழியாக தனது பாவங்களை உணர்ந்து அறிக்கையிடுகிறாள்.

கடைசியாக மீகா ஒரு தீர்க்கதரிசன ஜெபத்தைச் செய்கிறான். அதன் மூலம் கர்த்தர் தரும் வாக்குத்தத்தங்களையும் எடுத்துரைக்கிறான்:

7:18-ல் "மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்?"என்ற கேள்வியைக் கேட்டு. தீர்க்கதரிசனமாக அவனே அதற்குப் பதிலையும் தந்து இப்புத்தகத்தை நிறைவு செய்கிறான்:

"அவர் திரும்ப நம்மேல் இரங்குவார். நம்முடைய அக்கிரமங்களை அடக்கி நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்", (6-7அதி).

## மீகா புத்தகத்தின் கருப்பொருள்

மீகா 7:9ஐ இப்புத்தகத்தின் கருப்பொருள் வசனமாக எடுத்துக் கொள்ளலாம்:

"நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்கும் மட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன். அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டு வருவார், அவருடைய நீதியைப் பார்ப்பேன்".

இந்த வசனம், மனந்திரும்புதல், தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு மற்றும் கர்த்தர் அருளும் மீட்பு ஆகியவற்றைப் பற்றிய ஆழமான பிரகடனமாகும். இஸ்ரவேல் ஜனங்களும், யூதாவின் மக்களும் தங்கள் பாவத்திற்கு தாங்கள்தான் காரணம் என்று அறிக்கையிட்டனர். தேவன் அவர்கள்மேல் வருவித்த பாவத்திற்கானத் தண்டனையை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பையும் சகித்துக்கொண்டுள்ளனர். இப்பொழுதும் கர்த்தர் அவர்களை நீதிமான்களாக மாற்றியுள்ளார்; இது அவர்களது தகுதியினாலுண்டானது அல்ல; மாறாக அவரது நீதியின் மூலமாகவே அவர்களை நீதிமான்களாக்கியுள்ளார். இருளிலிருக்கும் தங்களை ஒளிக்குக் கொண்டுவருவார் என்று அவர்கள் நம்புவதை இக்கருப்பொருள் சித்தரிக்கிறது.

நான் நியாயத்தீர்ப்பின் இருளிலிருக்கிறேன்; அவரது கோபத்தைச் சுமக்கிறேன். இருளிலிருந்து மீண்டும் தெய்வீகக் கிருபையின் வெளிச்சத்துக்கு மாறி கர்த்தரின் நீதி மேலோங்குவதைக் காண்பேன் என்று இஸ்ரவேல் மற்றும் யூதா ஜனங்களின் பிரதிநிதியாய் தன்னை நிறுத்தி மீகா இதைச் சொல்லுகிறான். நமது எதிரிகளிடமிருந்தும், நம்மேல் குற்றம் சாட்டுகிறவர்களிடமிருந்தும் தேவன் நம்மைப் பாதுகாப்பார் என்னும் ஆழமான இறையியல் சத்தியத்தை இந்த கருப்பொருள் வசனம் நமக்குக் கற்பிக்கிறது.

## மீகா புத்தகத்தில் நாம் காணும் “தங்க - வசனங்கள்”

- கர்த்தர் நீதியை விரும்புகிறவர்; அவர் பரிசுத்தமானவர், (1:2-5;5:10-15;2:3-7).
- எப்போதும் தமது ஜனங்களை நேசிக்கும் கர்த்தர் மிகவும் அன்புள்ளவர்; இன்னும் அவர்களை நேசித்துக் காப்பாற்றுவார், (2:12,13;6:3-5;7:14,15).

- தேவனுடைய இரக்கமுள்ளத் திட்டங்களெல்லாம் இஸ்ரவேலருக்கும், யூதாவுக்குரியவைகள் மட்டுமல்ல, அவை முழு உலகத்துக்குரியவை ஆகும். எல்லா ஜாதியாரும் கடைசி நாளில் அவரிடத்தில் வருவார்கள், (4:1-4; 7:16,17).
- தேவன் தமது அநாதித் திட்டத்தின்படியும், தீர்மானத்தின்படியும் உலக இரட்சகரை இவ்வுலகத்துக்கு அனுப்புவார், (5:2-6).

எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேமே... இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார், (5:2).

முழு உலக இரட்சிப்பின் திட்டம் இங்கே மீகாவால் முன்னுரைக்கப்படுகிறது என்பதை நாம் காண்கிறோம்.

அன்று மீகாவின் காலத்திலிருந்து சுமார் 750 ஆண்டுகளுக்குப்பின் நிறைவேறிய இந்த தீர்க்கதரிசனம் **"உலக இரட்சகரின்"** முதலாம் வருகையை முன்னறிவித்தது.

அவர் மறுபடியும் நம்மைச் சேர்த்துக்கொள்ள **"மணவாளனாய்"** வர ஆயத்தமாயிருக்கிறார்.

**ஆயத்தமாவோம்! ஆயத்தப்படுத்துவோம்!**

---

**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

---

## Tips for functioning as Teams

1. Value every member.
2. Affirm each other.
3. Know your role and don't try to do others' role.
4. Submit to authority and trust God.
5. Speak the truth in love.
6. Defend one another.
7. Be clear on the vision and support it.
8. Don't talk about others behind their back.
9. Believe the best in others and give them the benefit of the doubt.



# திருமதி. குணசாலி

நீதிமொழிகள் 31: 10 - 31

## குணசாலியான பெண்

| | |
|---|---|
| காரியசித்தியுடையள் | : "தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள் (வச.13, 15, 19)" |
| விவேகமானவள் | : "...விசாரித்து வாங்குகிறாள்" (வச.16, 22, 24) |
| உத்தமி (அடக்கமாய் உடுத்திக் கொள்வாள்) | "அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது" (வச.25) |

## புரிந்துகொள்ளும் மனைவி

| | |
|---|---|
| கணவனின் நலனை நாடுபவள் | : "அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்"(வச. 12) |
| கணவனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள் | : "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்" (வச.16, 22, 24) |
| கணவனின் உயர்வுக்கு ஒத்துழைப்பவள் | : "அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலங்களில் உட்கார்ந்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான்" (வச. 22, 24) |

## அரவணைக்கும் தாய்

| | |
|---|---|
| ஞானமாய் குடும்பத்தை உடுத்துவிப்பாள் | : "தன் வீட்டார் அனைவருக்கும் இரட்டைப்புரை உடுப்புகளை உடுத்துவிக்கிறாள்"(வச. 21) |
| நன்றாக உணவளிப்பாள் | : "இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரம் கொடுக்கிறாள் " (வச. 15, 27) |
| சரியாகத் திட்டமிடுவாள் | : "தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள்" (வச. 14,18) |

## அன்பு காட்டும் அயலகத்தாள்

| | |
|---|---|
| ஏழைக்கு இரங்குபவள் | : "ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்" (வச. 20) |
| தேவையுள்ளோரை ஆதரிப்பவள் | : "சிறுமையானவர்களுக்குத் தன் கைகளைத் திறப்பாள்" (வச. 20) |
| ஆறுதலான வார்த்தை களைப் பேசுபவள் | : 'தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" (வச. 26) |

| | |
|---|---|
| அவளது மதிப்பு | : "அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" |
| அவளது பாராட்டு | : "அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி" என்கிறார்கள் |
| அவளது மேன்மை | : "நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள்" |
| அவளது இரகசியம் | : "கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்" |

**நீங்கள் எப்படி? சோதித்துப் பாருங்கள்!**

# வேதாகமத்தில் ஆண்களின் சிறப்புகள்

**வேதாகமத்தில் பெண்களுக்கென்று தனிசிறப்பு இருப்பது போல ஆண்களுக்கும் சில சிறப்புகள் உண்டு**

- வேதாகமத்தில் முதல் படைக்கப்பட்ட மனிதன் ஒரு ஆண் (ஆதி.1:27).
- வேதாகமத்தில் முதல் குழந்தையாக பிறந்தது ஆண் (ஆதி 4-1).
- வேதாகமத்தில் இயேசுவின் 12 சீஷர் ஆண்கள் (மத்.10:2).
- வேதாகமத்தில் ஆசரிப்பு கூடார பணி செய்பவர்கள் ஆண்கள் (யாத்.6:25).
- வேதத்தில் முதல் ராஜா ஆண் (1 சாமு.12:13).
- வேதாகமத்தில் புத்தகங்களை எல்லாம் எழுதியது ஆண்கள்.
- கோத்திர பிதாக்கள் என அழைக்கப்படுபவர்கள் ஆண்கள் (எண்.32:23).
- முதல் தேவ சத்தத்தை கேட்டது ஆண் -ஆதாம் (ஆதி.3:10).
- முதலில் காணிக்கை செலுத்தியது ஆண் - ஆபேஸ் (ஆதி.4:3)
- ஆசரிப்பு கூடாரத்தின் அனைத்து வேலைகளும் தேர்தெடுக்கப்பட்டவர்கள் ஆண்கள் (எண்.12:6).
- மோசே மூலம் நியாயம் விசாரிக்க ஏற்படுத்திய தலைவர்கள்.
- முதன்முதலில் மரிக்காமலே எடுத்துக்கொள்ளப்பட்டது ஒரு ஆண் (ஆதி.5:24).
- வேதத்தில் பிறப்பதற்கு முன் பெயரிட்டவர்கள் எல்லாம் ஆண்கள்.
- தேவன் என்பது ஆண்பாலைக் குறிக்கிறது (ஆதி.1:1).
- அனைத்து உயிரினங்களுக்கும் பெயரை வைத்தது ஒரு ஆண் (ஆதி.2:19).
- வேதத்தில் அதிக வருடம் உயிரோடு வாழ்ந்தது ஆண் (ஆதி.5:27).
- தேவனுக்கு முதலாவது பலிபீடம் கட்டியது ஒரு ஆண் (ஆதி.8:20).
- தேவனால் முதலில் தரிசனம் கிடைக்கப் பெற்றவன் ஒரு ஆண் (ஆதி.12.7).
- தேவனுக்கு முதல் பொருத்தனை செய்தது ஆண் (ஆதி.28:22).
- இஸ்ரவேல் ஜனங்களில் கணக்கு பார்க்கப்பட்டது ஆண்கள் மாத்திரமே (எண்.1:2).
- தேவனோடு முதல் உடன்படிக்கையை செய்தது ஒரு ஆண் (ஆதி.17:4).
- விருத்தசேதனம் ஆண்களுக்கு மட்டுமே உரித்தானது (ஆதி.17:10).
- வேதத்திலே இரட்டையாக பிறந்தது ஆண்கள் மட்டுமே (ஆதி.25:24;38:27).
- தேவன் ஏற்படுத்திய முதலாவது தீர்க்கதரிசி ஒரு ஆண் (ஆதி.20:7).
- பலி செலுத்துவதற்கு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டது ஒரு ஆண் ஆட்டுக்குட்டி (ஆதி.15:9).
- ஆசாரிய ஊழியம் செய்தவர்கள் ஆண்கள் (யாத்.28:1).
- தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி ஒரு ஆண் - ஒத்னியேல் (நியா.3:11).
- தேவனால் ஏற்படுத்தப்பட்ட ராஜாக்கள் ஆண்கள்
- தேவனுக்காக முதல் முதலில் ஆலயத்தை கட்டும்படி கட்டளை பெற்றது ஒரு ஆண்
- பந்தி விசாரிப்பாக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 7 பேர்கள் ஆண்கள் (அப்.6:3).
- ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஒப்புமை என்பது பூரண புருஷன் என்னும் ஆணின் தம்மை.
- புதிய ஏற்பாட்டில் முதல் இரத்த சாட்சியாக மரித்தது ஆண் (ஸ்தேவான்) அப்.7:59).
- உடன்படிக்கை பெட்டியை சுமப்பவர்கள் ஆண்கள் (யோசுவா 3:16).
- கானானை வேவு பார்க்க சென்றவர்கள் ஆண்கள் (எண்.21:32).
- தேவனுடைய சுவாசம் ஊதப்பட்டது ஆதாமாகிய ஆணுக்கு (2:7).
- கோத்திரங்கள் பிரிக்கப்பட்டது 12 ஆண்களின் பெயரால் (ஆதி.49.28).
- இயேசுவின் இரண்டாம் வருகையில் மணவாளன் என்ற ஆணின் தன்மை வருகிறது (மத்.25:6).

Rev.சந்தான எபிநேசர்
செயலாளர், பிரதேச ஆண்கள் ஐக்கியம்



# வடஇந்தியாவின் தற்போதைய களநிலவரம்

**Rev. கலை தேவதாசன்**

மேற்பார்வையாளர், செங்கல்பட்டு பிராந்தியம்

இயக்குநர், வடமேற்கு மிஷன்

வடஇந்தியாவின் களநிலவரத்தை அறிவது அவசியம். (Ground reality in North India) அங்குள்ள கள நிலவரத்தின்படிதான் ஜெபக்குறிப்புகள் எழுதப்படுகின்றன. லட்சக்கணக்கான விசுவாசிகள் அக்குறிப்புகளை வைத்துதான் ஜெபித்து வருகிறார்கள். அதற்காக கர்த்தரைத் துதிப்போம். அதே சமயம் அங்குள்ள சவால்கள் நமக்கு அறிவிக்கப்படும்போது அது **நேர்மறையான** விளைவுகளை ஏற்படுத்துகிறதா? அல்லது **எதிர்மறையான** விளைவுகளை ஏற்படுத்துகிறதா? என்று ஆய்வு செய்வது அவசியம். ஏனென்றால் ஜெபிக்க அனுப்பப்படும் ஜெபக் குறிப்புகளை இரு வெவ்வேறு பார்வையில் நம்மால் பார்க்க முடியும். அதாவது கொஞ்சமும் களயதார்த்தத்தை மறைக்காமல் உள்ளதை உள்ளபடி சொன்னால் வடஇந்தியாவைப் பொருத்தமட்டில் நாம் இந்த முடிவுக்கு வந்துவிடக்கூடும். “அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மால் கூடாது. அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்” என்று **எதிர்மறையாக** நாம் பேச ஆரம்பிப்போம் (எண்.13:31-33) அதை சரியான பார்வையில், புரிந்து கொண்டால்தான், “நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம். நாம் அதை எளிதாக ஜெயித்துக் கொள்வோம்” என்று சொல்ல முடியும் (எண்.13:30). ஆகவே தற்போதைய களநிலவரத்தை அறிவதுடன், அதை சரியான விதத்தில் புரிந்து வியாக்கியானம் செய்வதும் அவசியம்,(decode) அப்போதுதான் சிறந்த விளைவுகளை வடஇந்திய ஊழியத்தில் ஏற்படுத்த முடியும்.

## I. களநிலவரத்தை அறிய உதவும் ஏதுக்கள்

நீண்டகாலம் அங்கேயே தங்கி மாற்றுக் கலாச்சார ஊழியம் செய்யும் தென்னிந்திய மிஷனரிகள் மூலம் அங்குள்ள கள நிலவரத்தை அறிய முடியும். அங்குள்ள சுதேச மிஷனரி போதகர்கள் மூலமும் அங்குள்ள களநிலவரத்தை அறிய முடிகிறது.

நமது ஸ்தாபனம் நடத்தும் மாநில மாநாடுகள், கருத்தரங்குகள், சிறப்பு ஜெபகூட்டங்கள் மூலமும் அதை அறிந்து கொள்ள முடிகிறது.

அங்குள்ள அரசியல் சூழல்கள் மற்றும் சட்டதிட்டங்கள் மூலமும் தற்போதைய சூழ்நிலைகளை அறிய முடியும்.

அங்குள்ள சபைகளுக்கு ஏற்படும் வரவேற்பு மற்றும் எதிர்ப்புகளை குறித்து கேள்விப்படுவதின் மூலமும் களநிலவரத்தை அறிய முடிகிறது.

தமிழ் பிரதேசத்திலிருந்து நடைபெற்று வரும் குறுகிய கால மிஷன் சந்திப்பு ஊழியங்கள் மூலம் வடஇந்தியா போய் வந்து கொண்டு இருக்கும் நமது போதகர்கள் கொடுக்கும் அறிக்கை மூலமாகவும் நம்மால் யதார்த்த நிலையை அறிய முடிகிறது.

அங்கிருந்து தமிழ் பிரதேசம் வரும் மிஷனரிகள் கொடுக்கும் தகவல்களாலும் அங்குள்ள நிலவரம் குறித்து அறிய முடிகிறது.

உதவிபெறும் மிஷனரிகள் கொடுக்கும் தகவல்களால், ஜெபகுறிப்புகளால், ஊழிய அறிக்கையினால் அங்குள்ள நிலவரம் தெரிய வருகிறது.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் கொடுக்கும் தகவல் மூலமும் அநேக காரியங்களை அறிய முடிகிறது.

சில சவால்கள் அங்கு உண்டு என்பது உண்மைதான். எதிர்ப்புகளைப் பொருத்தமட்டில், 12 மாநிலங்களில் மதமாற்ற தடைச்சட்டம் அமலில் இருக்கின்றது.

200க்கும் அதிகமான போதகர்கள் சிறையில் வாடுகின்றனர்.

போதகர்களுக்கு எதிராக மட்டும் 2250 வழக்குகள் நிலுவையில் உள்ளன. சில மாநிலங்களில் வீடுகளில், ஆலயங்களில் ஆராதிக்க அனுமதி உண்டு. வேறு சில மாநிலங்களில் வீடுகளில் அனுமதி இல்லை.

இத்தனை எதிர்மறைக் காரியங்கள் இருந்தாலும் அங்கு ஊழியம் செய்து கொண்டிருக்கும் மிஷனரிமார் அத்தனை பேரும் ஊழியத்தைவிட்டு ஓடிவிடவில்லை.

இயல்பாகவே எதிர்மறை எண்ணமுள்ளவர்களே (Negative mindset) நடக்கும் சம்பவங்களை பார்க்கும்போது பயப்படுகின்றார்கள். நேர்மறை எண்ணமுள்ள மிஷனரிகளோ அதையே சாதகமாக பார்ப்பதாலும் அல்லது அதைச் சாதகமாக மாற்றிக் கொள்வதாலும் முன்பைவிட இப்பொழுது ஊழியம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது என்கிறார் AGNI மிஷன் தலைவர்.

## II. கானான் தேசத்தை சுற்றிப் பார்த்த இருவகை மக்கள்

கர்த்தருடைய வழிநடத்துதலின்படி மோசே 12 நபர்களை கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்க அனுப்பி வைத்தார்.

நான்கு முக்கிய தலைப்புகளில் கேள்விப்படிவத்தை தயாரித்து அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து (Structure) அனுப்பினார். நாற்பது நாட்கள் சுற்றித்திரிந்து அவர்கள் முழு தேசத்தின் தோற்றத்தையும், (Geographical) செழிப்பையும், அங்குள்ள நெடிய தோற்றமுள்ள மக்கள் கூட்டத்தையும் பார்த்து திரும்பினார்கள். **காட்சி** என்னவோ அனைவருக்கும் **ஒன்றுபோலதான் இருந்தது.**

ஆனால் அதில் பெரும்பான்மையானோரின் **பார்வையும், புரிதலும் தவறாக இருந்தது.**

அவர்கள் சொன்னார்கள் "தேசத்தில் ஒரு குறைவுமில்லை. ஆனால் அங்குள்ள மக்களோ நம்மைவிட பலசாலிகள். எனவே அவர்களை மேற்கொள்ள முடியாது, தேசத்தை சுதந்தரிக்க முடியாது" என்றார்கள் (எண்.13:31-33).

மாறாக அதே இடம், அதே மக்கள், அதே சூழ்நிலையைப் பார்த்த காலேப்பும், யோசுவாவுமோவென்றால், **நம்மால் முடியும் என்றார்கள்** (எண்.13:30; 14:6-9).

வடஇந்தியா ஊழியம் குறித்து வரும் சாதகமான, பாதகமான அறிக்கையை யோசுவா காலேப் பார்த்தது போல நாம் பார்க்க வேண்டும். மேலும் பெரும்பாலும் எதிர்மறைச் செய்திகள் மட்டுமே அதிகம் வாட்ஸ்அப் மூலம் பரப்பப்படுவதால் இன்று தென்னிந்திய ஆதரவும் குறையும் ஆபத்தில் இருக்கிறது. AGNIக்குட்பட்ட 17 மாநிலங்களில் (15 Districts) மட்டும் கிட்டத்தட்ட 3000 AG சபைகள் இருக்கின்றன. இன்னும் 10 வருடங்களில் அதை 6000 சபைகளாக உயர்த்த திட்டமிட்டு ஊழியம் செய்து வருகிறார்கள். இதுபோன்று வடஇந்திய ஊழிய வளர்ச்சிக்கான அநேக புள்ளி விவரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. நாம் வெறும் வாட்ஸ்அப் கொடுக்கும் செய்திகளை மட்டும் நம்ப ஆரம்பித்தால், "வடஇந்தியாவில் எல்லாம் இனி ஊழியம் செய்ய முடியாது" என்ற மனநிலைக்கு வந்துவிடும் அபாயம் நமக்குண்டு.

**இறுதியாக**

நாம் இன்று வட இந்தியாவை எப்படிப் பார்க்கிறோம். தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மூலமாகவோ? அல்லது கண்காண்கின்ற உண்மை நிலவரத்தின்படி அதை அர்த்தப்படுத்துகிறோமோ? அல்லது தென்னிந்திய சூழ்நிலைக் கண்ணாடி வழியாக பார்க்கிறோமா? வேதனை குறித்த 5 ஜெபக்குறிப்பு நமது ஜெபங்களில் கொடுக்கப்பட்டால், சாதனை குறித்த 5 துதிக்குறிப்புகள் மிஷன் ஜெபங்களில் கட்டாயம் இருக்க வேண்டும். உடனடியாக குறைந்தபட்சம் மண்டல மிஷன் முகாம்களில் நடைபெறும் நாடக முறைகளையாவது மாற்றுவோம். வழக்கமாக மிஷனரி ஒருவரை சிவப்பு மைக்கொட்டி, அழவைக்கும் பின்னணி இசையோடு, இதுதான் வட இந்திய ஊழியம் என்று காட்டுகிற பாரம்பரியத்தை மாற்ற முயற்சிப்போம். இனி வட இந்தியா ஊழியம் என்றாலே எதிர்ப்பு, அடி உதை, என்கின்ற உணர்ச்சியைத் தூண்டி அழைப்புக் கொடுக்கும் முறையை மாற்றினால்தான் மீண்டும் அநேகர் மிஷனரிகளாக வடஇந்தியா செல்ல முன்வருவார்கள். மொத்தத்தில் வடஇந்தியர்கள் கடினமானவர்களல்ல, வடஇந்தியா சுதந்தரிக்க முடியாத தேசமும் இல்லை (எண்.13:30).

---

## நீதிமான்கள் - The Righteous

**(நீதிமொழிகளிலிருந்து)**

1. நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும் (10:24).
2. நீதிமான் நித்திய அஸ்திபாரமுள்ளவன் (10:25).
3. நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை (10:30).
4. நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான் (11:8).
5. நீதிமான் நன்றாயிருந்தால் பட்டணம் களிகூறும் (11:10)
6. நீதிமான் தன் அறிவினால் தப்புகிறான் (11:9).
7. நீதிமான் துளிரைப்போலே தழைப்பார்கள் (11:28).
8. நீதிமான் தன் மிருகஜீவனைக் காப்பாற்றுகிறான் (12:10).
9. நீதிமான் நெருக்கத்தின்று நீங்குவான் (12:13).
10. நீதிமான் தன் அயலானப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன் (12:26).
11. நீதிமான் பொய்பேச்சே வெறுக்கிறான் (13:5).
12. நீதிமான் தனக்கு திருப்தியாகப் புசிக்கிறான் (13:25).
13. நீதிமான் தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன் (14:32).
14. நீதிமான் (கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்) அதற்குள் ஓடிச்சுகமாயிருப்பான் (18:10).
15. நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான் (20:7).
16. நீதிமான் பிசினித்தனமில்லாமல் கொடுப்பான் (21:26).
17. நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான் (24:16).
18. நீதிமான் தள்ளாடுவது (துன்மார்க்கனுக்கு முன்) கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப்போன சுனைக்கும் ஒப்பாகும் (25:26).
19. நீதிமான் சிங்கத்தைப் போல தைரியமாயிருக்கிறார்கள் (28:1).
20. நீதிமான் களிகூறும்போது மகா கொண்டாட்டம் உண்டாகும் (28:12).
21. நீதிமான் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள் (29:2).
22. நீதிமான் பாடி மகிழுகிறான் (29:6).
23. நீதிமான் ஏழைகளின் நியாயத்தைக் கவனித்தறிகிறான் (29:7).
24. நீதிமான் துன்மார்க்கர் விழுவதைக் காண்பார்கள் (29:16).

## உயிருள்ள விசுவாசம்

**(எபிரெயர் 11 லிருந்து படிப்பினைகள்)**

1. விசுவாசம் நற்சாட்சி பெறுகிறது. (வச 2)
2. விசுவாசம் இறை வார்த்தையின் படைக்கும் வல்லமையைப் புரிந்துகொள்கிறது. (வச 3)
3. விசுவாசம் கடவுளுக்கு முதலும் உச்சிதமுமானதைப் படைக்கிறது. (வச 4)
4. விசுவாசம் எல்லாவற்றிலும் தேவனைப் பிரியப்படுத்த முயலுகிறது. (வச 5)
5. விசுவாசம் உண்மையான ஜெபத்திற்குத் தேவன் பதிலளிக்கிறார் என்று நம்புகிறது. (வச 6)
6. விசுவாசம் கடவுளது எச்சரிப்புகளை உன்னிப்பாய்க் கவனிக்கிறது. (வச 7)
7. விசுவாசம் கேள்வி கேட்காமல் கடவுளுக்குக் கீழ்ப்படிகிறது. (வச 8)
8. விசுவாசம் புதிய களங்களைக் கைப்பற்ற துணிவுடன் புறப்படுகிறது. (வச 9)
9. விசுவாசம் நித்திய நோக்குடன் வாழ்கிறது. (வச 10)
10. விசுவாசம் ஆண்டவரை மட்டும் நோக்கிப் பார்த்து முடியாதவைகளைப் பார்த்து நகைக்கிறது. (வச 11)
11. விசுவாசம், “இவ்வுலகு எனக்குச் சொந்தமல்ல; நான் இங்கு ஓர் பரதேசி என்று அறியப்படுகிறது. (வச 13, 38)
12. விசுவாசம் பரலோகமே, என் சொந்தமே என்று காண்பேனோ என்று பாடிக்கொண்டிருக் கிறது. (வச 14, 16)
13. விசுவாசம் பின்திரும்புவதில்லை. (வச 15)
14. விசுவாசம் எந்த ஆசீர்வாதத்தையும் திரும்பக் கடவுளுக்கே படைத்துவிடத் தயங்குவதில்லை. (வச 17)
15. விசுவாசம் தேவனது உயிரோடெழுப்பும் வல்லமையைச் சார்ந்திருக்கிறது. (வச 19, 35அ).
16. விசுவாசம் இனிவரும் தலைமுறைகளுக்குத் தீர்க்கதரிசனச் செய்திகளை விட்டுச்செல்லு கிறது. (வச 20-22)
17. விசுவாசம் பயமுறுத்தல்களுக்குப் பயப்படாமல் தேவனது பாதுகாக்கும் வல்லமையைப் பற்றிக் கொள்ளுகிறது. (வச 23)
18. விசுவாசம் இவ்வுலகச் செல்வாக்கைப் பெரிதாக நினைப்பதில்லை. (வச 24)
19. விசுவாசம் பாவச் சோதனைக்கு மறுப்பு தெரிவிக்கிறது. (வச 25)
20. விசுவாசம் பாடுபடும் இறைமக்களோடு தன்னார்வமாய்ச் சேர்ந்துக்கொள்ளுகிறது. (வச 25)
21. விசுவாசம் பணத்தைக் கும்பிடுவதில்லை. (வச 26)
22. விசுவாசம் இவ்வுலகின் எந்த அதிகாரத்திற்கும் அஞ்சாது பரம தரிசனத்திற்குக் கீழ்ப்படிகிறது. (வச 27)
23. விசுவாசம் கிறிஸ்துவின் இரத்தத்திற்குள் மறைந்து கொள்ளுகிறது. (வச 28)
24. விசுவாசம் முடியாதவைகளையும் முயற்சித்துப் பார்க்கிறது. (வச 29)
25. விசுவாசம் எளிதில் எதையும் விட்டுவிடாது. (வச 30)
26. விசுவாசம் பிசாசின் பெருந்திரளைச் சேராது தேவனின் சிறுமந்தையோடு இணைந்து கொள்ளுகிறது. (வச 31).
27. விசுவாசம் நீதிநெறியை நடப்பித்துக் காட்டுகிறது. (வச 33)
28. விசுவாசம் தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறது; தேவனுக்காகப் பெரிய காரியங்களை செய்ய முயற்சிக்கிறது. (வச 32-34)
29. விசுவாசம் எவ்வித துன்பத்தையும், ஏன் மரணத்தையுமே சந்திக்க வேண்டிய திருந்தாலும், தனது உன்னதக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காது. (வச 35-37)
30. விசுவாசம் கேலியை கேலி செய்யும். (வச 36)

நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று
உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் (2 கொரி.13:5).

நன்றி : ஆசீர்வாதம்



# ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தாரா? இல்லையா?


**Rev. ஜேக்கப் இஸ்ரேல்**

இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்


**பதில் : இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது நேரில் கண்டவர்களின் சாட்சி (Eye Witness):**

**அப். 2:23-32 "...நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம்"** என்கிறார். பேதுரு. இதில் "நாங்கள்" என்பது 120 பேர் மேல் வீட்டில் கூடி இருந்தவர்களை குறிக்கும்.

**லூக்கா 1:1-2 "ஆரம்ப முதல் கண்ணாரக்கண்டு"**. என்று எழுதுகிறார். லூக்கா, இயேசு சிலுவையில் அறையப்பட்ட செய்தியை முழுவதுமாக எழுதுகிறார்.

**1 யோவான் 1:1 "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்".**

**2 பேதுரு 1:16 "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்".**

இவர்கள் எல்லாரும் இயேசுவோடு இருந்தவர்கள், அவரோடு கூட நடந்தவர்கள், சாப்பிட்டவர்கள். இவர்கள் சொல்வது உண்மையாய் இருக்குமோ? அல்லது 600 ஆண்டுகளுக்கு பின் எழுதப்பட்ட குர் ஆன் சொல்வது உண்மையாய் இருக்குமோ? என்பதை நன்றாய் சிந்திக்க வேண்டும். இப்போது இயேசுவின் மரணத்தை உறுதி செய்யும் வேறு சில ஆதாரங்களை ஒவ்வொன்றாக நாம் பார்ப்போம்.

ஒருவர் சிலுவையில் அறையப்பட்டால் அதன் நிமித்தம் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். அப்போது அந்த நபர் தன் கால்களை அழுத்தி, தன் உடலை மேலே தூக்குவார். இப்படி செய்வதின் மூலம் மூச்சுத் திணறல் ஓரளவிற்கு கட்டுப்பாட்டிற்கு வரும். ஆனால் இப்படி செய்யும்போது ஆணி பாய்ந்த கால்களில் ஏற்படும் வலியும், அதிலிருந்து கசியும் இரத்தமும் மரண வேதனையை அளிக்கும். மூச்சுத் திணறலின் நிமித்தம் சிலுவையில் அறையப்பட்ட நபர் வலியை பொருட்படுத்தாமல் தன் உடலை உயர்த்துவார். இல்லாவிடில் அவர் சீக்கிரமாகவே இறந்துவிடுவார். ஆகவேதான் ரோம போர் சேவகர்கள் இயேசுவுடன் கூட அறையப்பட்ட இரண்டு கள்ளர்களும், சீக்கிரம் சாகும்படி அவர்கள் கால்களை முறித்து, அவர்கள் தங்கள் உடலை மேலே உயர்த்தாதபடிக்கு செய்தார்கள். ஆனால், அவர்கள் இயேசுவின் கால்களை முறிக்கவில்லை. காரணம், இயேசு அதற்கு முன்பாகவே மரித்துவிட்டார். வசன ஆதாரங்கள் (லூக்கா 23:46; யோவ.19:30-33)

யோசேப்பு பிலாத்துவினிடத்தில் இயேசுவின் சரீரத்தை கேட்டபோது, பிலாத்து இயேசு சீக்கிரத்தில் மரித்து போனதால், நூற்றுக்கு அதிபதியை அழைத்து இயேசு சிலுவையில் மரித்ததை மறுபடியுமாக உறுதி செய்ய சொன்னான்.

அப்படியே நூற்றுக்கு அதிபதி உறுதி செய்தான். அதற்கு பின்தான், இயேசுவின் சரீரத்தை கொண்டுபோக பிலாத்து அனுமதி அளித்தான் (மாற்கு 15:44,45).

மேலும் யோ.19:34-ம் வசனத்தில் போர்ச்சேவகன் ஒருவர் இயேசுவின் விலாவில் ஈட்டியினாலே குத்தினான் என்பதையும், அதின் நிமித்தம் இரத்தமும், தண்ணீரும் வந்தது என்பதையும் பார்க்க முடியும். நவீன மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தை குறித்து சொல்லும்போது, "இவ்விதமாய் விலாவில் ஈட்டியால் குத்தப்பட்டு இரத்தமும், தண்ணீரும் வெளியேறினால், அது நுரையீரல் மற்றும் இருதயத்தை பலத்த சேதப்படுத்தி இருக்கும். இப்படி குத்தப்பட்ட நபர் மரணித்திருப்பது நிச்சயம்" என்கிறார்கள். ஆதாரம் : Journal of the American Medical society (March 21, 1986), Pg.1463.

இயேசுவின் சரீரம் மூன்று நாள் கல்லறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. (வசனங்கள்: யோ.19:39,40; மத்.27:60) ஒரு வேளை இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்று வைத்துக்கொண்டாலும் (விவாதத்திற்காக) 3 நாட்கள் உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவ உதவியின்றி அவர் நிச்சயம் மரித்திருப்பார் என்பதை மறுக்க முடியாது.

### இயேசுவுக்கு மரணதண்டனை கொடுத்த பிலாத்துவின் கடிதம்:

4-ம் நூற்றாண்டில் ரோம ஆட்சி கவிழ்ந்தது. அதன் பின் பிலாத்துவின் அரண்மனையை சுத்தம் செய்யும்போது, அவன் திபேரியு மன்னனுக்கு எழுதிய கடிதம் கிடைத்தது. அதில் இயேசுவும், இரண்டு கள்ளர்களும் சிலுவையில் அறையப்பட்ட சம்பவங்கள் எழுதப்பட்டு இருந்தன. அதில் இயேசு அநியாயமாய் காட்டி கொடுக்கப்பட்டார் என்றும், இரண்டு கள்ளர்களில் ஒருவன் பெயர் - DESMAS (சிலுவையில் இயேசுவை ஏற்றுக்கொண்டவன்), மற்றொருவன் பெயர்- GESTAS என்றும் இருந்தது. சிலர் இதிலும் விவாதம் செய்வார்கள். இக்கடிதம் 18-ம் நூற்றாண்டை சேர்ந்தது என்பார்கள். ஆனால், கி.பி-150ல் வாழ்ந்த JUSTIN MARTYR PHILOSPHER, சீசர் அந்தோனியஸ் பயஸ் என்பவருக்கு எழுதிய கடிதத்தில், பிலாத்துவின் இக்கடிதத்தை குறிப்பிட்டிருக்கிறார் மற்றும் கி.பி 220ல் வாழ்ந்த TERTULLIAN என்பவரும் இக்கடிதத்தை குறிப்பிட்டிருக்கிறார். ஆக இக்கடிதம் கி.பி 1-ம் நூற்றாண்டை சேர்ந்தது என்பதை மறுக்க முடியாது.

### எல்லாவற்றிக்கும் மேலாக மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, தனது மரணத்தை குறித்து சொன்ன சாட்சி :

**வெளி.1:18-ல்** இயேசுவே தன்னை யோவானுக்கு வெளிப்படுத்தி "**மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்**" என்றார். இதை விட ஒரு பெரிய சாட்சி எதுவும் இருக்கவே முடியாது. இயேசுவின் வாழ்க்கை முற்றிலும் பரிசுத்தம். அவர் மரித்தது, உயிரோடு எழுந்தது உண்மை. ஆனபடியினால் தான், எல்லா சீஷரும் அவருக்காக மரிக்கவும் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். பொய்யான மனிதனுக்கோ, பொய்யான சம்பவத்துக்கோ தங்களை எவரும் ஒப்புக் கொடுக்க மாட்டார்கள்.

இதற்கு பிறகும் சில இஸ்லாமியர் சொல்வார்கள். "இயேசுவை அல்லா எடுத்துக் கொண்டான். இயேசுவின் முகத்தை யூதாசுக்கு அல்லா கொடுத்துவிட்டான். சிலுவையில் அறையப்பட்டது யூதாஸ்" என்று, சற்று சிந்திக்கவும். அப்படி யூதாஸாக இருந்திருந்தால், அடித்து இழுத்து கொண்டு போகும்போது "நான் யூதாஸ், இயேசு அல்ல, நான் யூதாஸ், இயேசு அல்ல" என்று

சொல்லியிருப்பான் இல்லையா? மாறாக சிலுவையில் அறையப்பட்ட நபர், “பிதாவே இவர்களுக்கு மன்னியும். இவர்கள் செய்வது இன்னது என்று அறியாமல் செய்கிறார்கள்” என்று சொல்வதை பார்க்க முடியும். சிலுவையில் அறையப்பட்ட நிலையில் இது போன்றதான வாக்கியத்தை நிச்சயம் யூதாஸ் சொல்லியிருக்க மாட்டான். யூதாஸ் மாத்திரமல்ல, உலகத்தில் உள்ள எப்பேர்ப்பட்ட நல்லவனாக இருந்தாலும், இத்தனை சித்தரவதை பண்ணியவர்களை மன்னிக்கும்படி வேண்டியிருக்கமாட்டான். அன்பே உருவான ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினால் மாத்திரமே இப்படி பேச முடியும். இதை பார்த்ததால்தான், இயேசுவுடன் சிலுவையில் தொங்கின 2 கள்ளர்களில் ஒருவன் இரட்சிக்கப்பட்டான். இயேசுவும் அவனை நோக்கி “இன்றைக்கு நீ என்னோடு பரதேசியில் இருப்பாய்” என்றார். யூதாஸாக இருந்தால் இந்த வாக்குறுதியை எப்படி கொடுத்திருக்க முடியும்? அடுத்தது, இயேசு சிலுவையில் மரிக்கும் முன் “பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” என்று சொன்னார் (லூக்கா 23:46). இயேசுவுக்கு மட்டும் தான், தன் ஜீவனை கொடுக்கவும் அதிகாரம் உண்டு. அதே போல் மீண்டும் தன் ஜீவனை அடையவும் அதிகாரம் உண்டு (யோவான் 10:17-18). இப்படியிருக்க, இந்த சம்பவம் யூதாசுவுக்கு எப்படி பொருந்தும். மேலும் இயேசு சிலுவையில் அறையப்படும் முன்பே, யூதாஸ் தற்கொலை செய்து கொண்டான். இந்த காரியம் யூதர்களின் வரலாற்றில் தெளிவாக உள்ளது. ஆக இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்ததும் உண்மை, அவர் உயிரோடு எழுந்ததும் உண்மை. அவர் மீண்டும் வருவதும் உண்மை.

**எல்லா புகழும் இறைவனாகிய இயேசு ஒருவருக்கே!!!**

---

## எல்லாமே ஜெயம் தான்!

- **தரித்திரன் என் மேல் தரிசனம் எதற்கென்றேன்?**
  **தரித்திரன் என்றாலும் என்னை தரித்தவன் அல்லவோ! என்கிறார்.**
- **நல்ல நிலத்தில் விழுந்த விதை என்பதில் சிறிது கர்வம் தான்!**
  **ஆனாலும் சாக வேண்டுமே பலன் கொடுக்க!!**
- **தொலைந்த ஆடானேன் தனியனாய் தவித்தேன்**
  **மந்தைசேர்ந்த பின் தான் அறிந்தேன்**
  **மீந்த 99-க்கும் இதே அனுபவம் உண்டென்று!**
- **ஒவ்வொரு ஜெபமும் வினாவுடன் தான் முடிகிறது**
  **ஆனால் விடை என்னவோ ஜெயம் தான்!**
- **எத்தனை முறை விழுந்தாலும் எழும்ப சொல்லுகிறார்...**
  **எனக்கே சலித்துவிட்டது, எப்படி சொல்லாமல் இருப்பார்...**
  **அவர் தான் ஏழு எழுபது முறை மன்னிப்பவர் ஆயிற்றே!**
- **ஒவ்வொரு முறை சறுக்கும்போதும் என் கரம் பிடிக்கிறார்...**
  **விழுந்துவிட கூடாது என்று மட்டுமல்ல என்னை உயர்த்திவிடவும் தான்.**

**திருமதி. அ. பிரின்சி ஷெக்கினா**
பெராக்கா ஏஜி சபை, கல்மேடு, மதுரை.



# தமிழ் பிரதேச மத்திய வாலிபர் ஊழியம்

## Rev. S. கோபிநாத்

President, Christ's Ambassadors

## வெற்றியுள்ள வாழ்க்கை

“தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் **தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது”.** தானியேல் 6:28

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

பாபிலோன் வல்லரசு நாடாக விளங்கிய காலத்தில் வாலிபனான தானியேல் பாபிலோன் தேசத்திற்கு அடிமையாகக் கொண்டு வரப்பட்டான். பொதுவாக ஒரு அரசாங்கம் கவிழ்ந்து புதிய அரசாங்கம் வரும்போது புதிய ராஜாக்கள் பழைய அதிகாரிகளை சிறையில் அடைப்பார்கள் அல்லது கொன்று விடுவார்கள். பெல்ஷாத்சார் காலத்தில் பாபிலோன் வீழ்ச்சியுற்று மேதிய-பெர்சிய சாம்ராஜ்யம் தோன்றியது. தரியு, கோரேசு ஆட்சி காலத்தில் தானியேலை தேவன் எல்லாக் காரியங்களிலும் வெற்றியடையச் செய்தார். தானியேலின் காரியம் ஜெயமாய் இருக்க அவனிடத்தில் காணப்பட்ட குணாதிசயங்கள் நம்முடைய வாழ்விலும் காணப்பட்டால் தேவன் நம்முடைய வாழ்விலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜெயத்தை தந்து எல்லா இடங்களிலும் வெற்றி சிறக்கப்பண்ணுவார்.

தானியேலின் வெற்றிப்பயணத்தின் படிகள் இதோ...

**PURPOSE - வாழ்வின் நோக்கம்** : தானியேல் 2:13-14

அந்நிய தேசத்தில் அடிமையாகக் கொண்டுபோகப்பட்டாலும் தானியேல் தான் யார் என்பதையும் தன்னைக் குறித்து தேவனின் திட்டம் என்ன என்பதையும் அறிந்து, சூழ்நிலையைக் குறைகூறாமல் தேவனது திட்டம் தன் வாழ்வில் நிறைவேற முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டதால் தேவன் ஜெயமுள்ள வாழ்க்கையைத் தந்தார்.

பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளும் கொலை செய்யப்பட கட்டளை வந்த போதும் தானியேல் சூழ்நிலையின் அவசியத்தை புரிந்துகொண்டு ராஜாவினுடைய சேர்வைக்காரனிடத்தில் யோசனையும், புத்தியுமாய்பேசி தேவனது ஞானத்தினால் மறைபொருளை வெளிப்படுத்தி தன்னோடிருந்த அனைவரையும் பாதுகாத்தான். ஆகையால் தானியேல் 2:48ல் வாசிப்பது போல் தானியேல் பெரியவனாக்கப்பட்டான். பாபிலோன் மாகாணம் முழுவதுக்கும் அதிபதியாக மாறினான். சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாக மாறினான்.

**When you realize God's purpose for your life isn't just about you. He will use you in a mighty way. - Dr. Tony Evans.**

வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து செயல்படும்போது தேவன் நிச்சயம் உங்களை வெற்றியின் பாதையில் கொண்டு செல்வார்.

**PRAYER - ஜெபம்** : தானியேல் 6:10

ஜெபம் என்பது ஒரு கிறிஸ்தவனின் மிகப்பெரிய ஆயுதம். ஜெபம் என்பது நம்முடைய தேவைகளுக்காக மட்டும் தேவனை அணுகுவதல்ல. மாறாக தேவனுடன் உள்ள உறவாகும்.

தானியேலுக்கு விரோதமாக பிரதானிகள் சதித்திட்டம் தீட்டி ராஜாவைத் தவிர 30 நாளளவும் யாதொரு காரியத்திற்கும் விண்ணப்பம் செய்யக் கூடாது என்று ராஜாவினால் கட்டளைப் பிறப்பிக்கப்பட்ட போதிலும் தான் முன்பு செய்து வந்த படியே ஜெபித்து வந்தான். அதிகாரியாக பல அலுவல்கள் இருந்தாலும் வேலையைக் காரணம் சொல்லாமல் இடைவிடாமல் ஜெபம் செய்து வந்ததை தரியு ராஜா கூட அறிந்து வைத்திருந்தான். தானியேல் 6:16ம் வசனத்தில் தரியு தானியேலிடத்தில் நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்று சொல்லுகிற சாட்சியை வாசிக்கிறோம். ஜெபத்தில் தேவனோடு உள்ள உறவினால் காரியம் ஜெயமாயிருந்தது. இடைவிடாத ஜெபம் தானியேலுக்கு தந்தது.

**No Matter how dark and hopeless a situation might seem. Never Cease Praying. - Dr. Billy Graham.**

தானியேல் மூன்று வேளையும் ஜெபித்தார். அது அவரை சிங்கங்களுக்கு முன்பாக மட்டுமல்ல, ராஜாக்களுக்கு முன்பாகவும் தைரியமாக நிற்கச் செய்தது. - Charles Ryrie.

ஜெபிக்கத் தெரிந்த மனிதனுக்குத் தெரியாத காரியம் எதுவுமில்லை. அவனால் சாதிக்க முடியாத காரியம் எதுவுமில்லை. - E.M. Bounds.

1 தெசலோனிக்கேயர் 5:17ன்படி நாமும் இடைவிடாமல் ஜெபிக்கும்போது நமக்கும் ஜெயம் நிச்சயம். ஜெபிப்போம்! ஜெயம் பெறுவோம்.!

**PURITY - பரிசுத்த வாழ்க்கை** : தானியேல் 1:3-8, 6:4

வாலிபனாகிய தானியேலுக்கு கல்தேயருடைய எழுத்து மற்றும் பாஷையும் கற்றுக்கொடுக்கப்பட்டது. தானியேல் கலாச்சாரத்தினால் தன்னுடைய இருதயத்தை, சரீரத்தை, மனதை, சிந்தனையை பரிசுத்தமாய் காத்துக்கொண்டான். பரிசுத்தமானது தேவனையும் அவருடைய மகிமையையும் காணப்பண்ணும் (மத்தேயு 5:8).

பரிசுத்தத்தில் எந்த சமரசமும் செய்யாத தானியேலுக்கு தேவன் எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும், சாமர்த்தியத்தையும் கொடுத்து சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.

ஞானத்துக்கும், புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களை கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரிலும் பத்துமடங்கு சமர்த்தனாகக் கண்டான்.

**PERSEVERANCE OF FAITH - விசுவாசத்தில் நிலைத்திருத்தல்** : தானி 6:23,6:4

தானியேல் தேவன் பேரில் வைத்திருந்த விசுவாசம் அவனுக்கு சேதம் வராதபடி காத்துக்கொண்டது. விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்.

தானியேல் தன் தேவன் பேரில் வைத்திருந்த விசுவாசம் தானியேலை சிங்கங்களுக்குத் தப்புவித்தது. தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டுமென்று தரியு ராஜா தீர்மானித்தது மல்லாமல் அவர் ஜீவனுள்ள தேவன், அவரே தப்புவிக்கிறவர், இரட்சிக்கிறவர், அற்புதங்களைச் செய்கிறவர் என்பதைத் தெரிவித்தான். தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. விசுவாசத்தில் நாமும் உறுதியாக நிற்கும்போது மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளிலும் கூட தேவன் நம்மை பாதுகாத்து விடுவிப்பார்.

தானியேல் 6:4 பிரதானிகள் தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடியும் தானியேல் உண்மையுள்ளவனாய் இருந்தபடியால் யாதொரு குற்றமும், குறைவும் காணப்படவில்லை.

**The world doesn't read the Bible; it reads Christians King who read Daniel's life found the God be believed in. - Dr. Billy Graham.**

**POWER - பரிசுத்தாவியின் வல்லமை** : தானியேல் 4:8,9

வாலிபனாகிய தானியேலுக்கு பரிசுத்த தேவர்களின் ஆவி இருந்தது. பரிசுத்த ஆவியின் பெலத்தினால் மறைபொருளை வெளிப்படுத்தக் கூடிய கிருபைகளைப் பெற்றிருந்தான். அப் 1:8-ன் படி பரிசுத்த ஆவியானவரால் நாம் பெலனடைந்து சாட்சிகளாயிருக்க முடியும். பரிசுத்த ஆவியானவர் பாவம், நீதி, நியாயத்தீர்ப்பைக் குறித்து உணர்த்தி, பாவத்தை ஜெயிக்கவும், கிறிஸ்துவைப் போல மாறவும் நம்மை பரிசுத்த வாழ்க்கைக்கு நேராய் நடத்துகிறார். கிறிஸ்துவை நமக்கு வெளிப்படுத்தி, சத்தியத்தில் நிலைநிற்கச் செய்கிறார். நமது பலவீனங்களில் உதவி செய்கிறார். ஆவியின் வரங்களைத் தந்து நம்மை பயன்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் கிறிஸ்தவ வாழ்க்கையை வெற்றி சிறக்க வாழ முடியாது. நாமும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, பெலனடைந்து, வெற்றியுள்ள வாழ்க்கை வாழ தேவன் கிருபை செய்வாராக.

நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் எவ்விதத்திலும் கறைபடாதபடிக்குக் காத்துக் கொள்வோமானால் நம் வாழ்விலும் மேன்மையும் நம்மை தேடி வரும்.

வாலிபனாகிய தானியேல் வாழ்வின் நோக்கம், ஜெபம், பரிசுத்த வாழ்க்கை, விசுவாசத்தில் நிலைத்திருத்தல், பரிசுத்தாவியின் வல்லமை போன்ற காரியங்களில் நமக்குக் கற்றுக்கொடுத்த காரியங்களை நாமும் செயல்படுத்துவோமானால் நமது காரியம் ஜெயமாக மாறும். நம் நிமித்தம் தேவ நாமம் மகிமைப்படும். சூழ்நிலைகள், சவால்களைப் பாராமல் தேவ நோக்கத்தைப் புரிந்துகொண்டு, ஜெபத்திலும், பரிசுத்தத்திலும், விசுவாசத்தில் வைராக்கியங்கொண்டு கிறிஸ்துவுக்குள் எல்லா இடங்களிலும் வெற்றிச்சிறந்தவர்களாய் மாற கர்த்தர் கிருபை செய்வாராக.



# இதை நினைத்து புருஷனாயிருங்கள்

(பகுதி 6)

**Remember this, and Show yourselves MEN**


**Rev.R.தாசையா**

தேனி மண்டல தலைமைப் போதகர்


## மனைவிக்கு நல்ல புருஷராயிருங்கள்

### போஷிக்கும் புருஷனாயிரு

ஆதி மனித குடும்பத்தை தேவன் சிருஷ்டித்து, அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் கொடுத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதியாகமம் 2:15).

புருஷன்மார்கள் குடும்பத்தை கட்டிக்காப்பது எப்படி இருக்க வேண்டும் என்றால், கர்த்தர் சபையாகிய மணவாட்டியை போஷித்து காப்பாற்றுவது போல இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 5:28,29 ஆகிய வசனங்களில் கூறும்போது.

**புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும். தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தை பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.**

குடும்பத்தின் தலைவனுக்கு, புருஷன் என்ற ஸ்தானத்தில் இருப்பவர் களுக்கு தேவனின் வாக்குறுதி, ஆலோசனை, புத்திமதி என்னவென்றால்: உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய். குடும்ப வாழ்வில் இருக்கும் கணவனுக்கு அந்த குடும்பம் தன் மூலம் போஷிக்கப்பட அவனது கைகள் பிரயாசப்பட வேண்டும்.

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள் (சங்.128:3).

**தேவன் நமக்கு சொன்னவைகள், நாம் நம்பின தேவ வார்த்தைகள், நாம் ஜெபிக்கும் ஜெபங்கள் அனைத்தும் நிறைவேற வேண்டுமானால் திருச்சபையில் உள்ள ஒவ்வொரு ஆண்களும் கட்டாயம் உழைக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் போஷிக்கும் கணவனாக முடியும்.**

### யாக்கோபின் வாழ்க்கை கற்றுத்தரும் பாடம்

இருபது வருடங்கள் தன் மாமனாகிய லாபானிடத்தில் கடினமாக உழைத்த யாக்கோபைக் குறித்து இவ்விதமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான் (ஆதி.30:43).

லாபானிடமிருந்து கானானை நோக்கி புறப்பட்டு வரும் யாக்கோபு, ஏசா தனக்கு எதிர்கொண்டு வருவதை அறிந்து ஏசாவுக்கு மிகவும் பயந்ததினால், அன்று ராத்திரி அவன் அங்கே தங்கி, தன் கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானமாக, இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களையும், பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுத்து.... (ஆதி.32:13,14,15).

இவ்வளவு தன் சகோதரன் ஏசாவுக்கு அன்பளிப்பாக தந்திருப்பா னென்றால், அவனிடம் எவ்வளவு அதிகமாக இருந்திருக்கும்? யாக்கோபின் உழைப்பை யாக்கோபே சொல்லுகிறான். உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருஷம் வேலை செய்கிறேன் என்றான். அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றினது (ஆதி.29:18,20).

ஒன்றை அடைந்தே தீரவேண்டும் என்ற ஒரே இலட்சியத்தில் பதினான்கு வருடங்கள் உழைக்கிறான். அந்த உழைப்பு அவனுக்கு கொஞ்ச நாளாய் தோன்றினது என்று வாசிக்கிறோம் (ஆதி.30:30).

**உங்களை நம்பி மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உடன்பிறப்புகள் உண்டே. அதற்காக நீங்கள் கட்டாயம் உழைத்து குடும்பத்தை போஷித்து தான் ஆக வேண்டும். ஒவ்வொரு புருஷர்களைக் குறித்தும் தேவன் வைத்திருக்கும் சித்தம் இதுவே. வேதமும் அதை தான் நமக்கு அடிக்கடி நினைப்பூட்டுகிறது. "என் குடும்பத்துக்காக சம்பாத்தியம் பண்ணுவது எப்போது...?"** என்கிறார் யாக்கோபு. உங்கள் உழைப்பில் இப்படி ஒரு முயற்சி உண்டா?

ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம் (2தெச.3:10,11,12). **திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்** (எபேசியர் 4:28).

**யாக்கோபின் உழைப்பில் எத்தனையோ கஷ்டங்கள் இருந்தது, சம்பளம் பத்துமுறை மாற்றி அமைக்கப்பட்டது. ஆனாலும் கடினமாக உழைத்தான்.** பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டு வராமல், அதற்காக நான் உத்தரவாதம் பண்ணினேன்; பகலில் களவு போனதையும், இரவில் களவு போனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர். பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய்ப் பாடுபட்டேன் (ஆதியாகமம் 31:38,41).

கர்த்தர் யாக்கோபோடேகூட இருந்தார், அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். பஞ்சத்தை சந்தித்தான். அதை சமாளிக்க இன்னும் பணம் பொருள் வைத்திருந்தான். அதற்கு அவர்கள் தகப்பனாகிய இஸ்ரவேல்: அப்படியானால் ஒன்று செய்யுங்கள்; இந்தத் தேசத்தின் உச்சிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின் தைலமும், கொஞ்சம் தேனும், கந்தவர்க்கங்களும், வெள்ளைப்போளமும், தெரபிந்து கொட்டைகளும், வாதுமைக் கொட்டைகளும் உங்கள் சாக்குகளில் போட்டு, அந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொண்டுபோய்க் கொடுங்கள். பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டு போங்கள், சாக்குகளின் வாயிலே திரும்பக் கொண்டு வந்த பணத்தையும் கொண்டு போங்கள்; அது கைப்பிசகாய் வந்திருக்கும். (ஆதியாகமம் 43:11,12).

பெரிய உயர்ந்த மனிதர்களை தன்னுடைமைகளால் கனம்பண்ணும் அளவுக்கு யாக்கோபின் உழைப்பு இருந்தது. கடைசியாக தன் குமாரன் யோசேப்பு எகிப்தில் அதிபதியாக இருந்தாலும், யாக்கோபின் குடும்பம் முழுவதையும் காப்பாற்றும் செல்வந்தனாக இருந்தாலும், இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: இதோ, நான் மரணமடையப் போகிறேன்; தேவன் உங்களோடே இருப்பார். அவர் உங்கள் பிதாக்களின் தேசத்துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்ணுவார் என்றும், உன் சகோதரருக்குக் கொடுத்ததைப் பார்க்கிலும், நான் என் பட்டையத்தாலும், என் வில்லினாலும், எமோரியர் கையிலிருந்து சம்பாதித்த ஒரு நிலத்தை உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்தேன் என்றும் சொன்னான் (ஆதி.48:21,22).

யோசேப்புக்கு கொடுக்கும் அளவுக்கு யாக்கோபு ஆசீர்வாதமாய் இருந்ததற்கு காரணம், யாக்கோபு தன் குடும்பத்தை போஷிக்கும் புருஷன், பிரயாசப்பட்டு பலனை அனுபவிப்பவன்.

**சபையின் ஆண்களே! உங்களிடத்தில் பல ஆன்மீக நல்ல குணங்கள், திறமைகள், ஊழியம் செய்யும் ஆற்றல், ஜெபவாழ்வு, வேத தியானம், பரிசுத்தம் காணப்படலாம். இவைகள் எல்லாம் உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தான் உதவும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிகழ்காலம், எதிர்காலம், குடும்பம், பிள்ளைகளின் படிப்பு, திருமண காரியங்கள் எல்லாம் ஆசீர்வாதமாக இருக்க நீங்கள் உழைக்கும் குடும்ப தலைவனாக, போஷிக்கும் தகப்பனாக, தேவைகளை தேடித்தரும் நபராக இருந்தால் தான் கிறிஸ்தவ வாழ்வு உங்களுக்கும் நன்றாக இருக்கும். உங்களை சார்ந்தவர்களும் நன்றாக இருப்பார்கள்.**

தொடரும்...


## STUDENTS FOR CHRIST
## DISCIPLESHIP TRAINING CAMP - 2026

Theme

"முன்னேறு 2.0–(SHIFT 2.0)"

Date: APRIL 13 to MAY 31

Place: ALL SECTIONS

*Pray!* *Plan!* *Participate!*



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ், எல்லாரும் எப்படியிருக்கிறீங்க. விடுமுறை நாட்களில் நல்லா என்ஜாய் பண்ணுறீங்கனு நினைக்கிறேன். இந்த மாதம் உங்களை ஒரு சூப்பர் ஸ்டோரியோட மீட் பண்ணுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வாங்க வெயிட் பண்ணாம நம்ம கதை உலகத்துக்கு போகலாம்.

மாலையின் அமைதியான நேரம். வீட்டு முன் வாசலில் பழைய நாற்காலியில் அமர்ந்திருந்த தாத்தா, தினமும் வழக்கம் போலவே தனது பைபிளை திறந்து மெதுவாக வாசித்துக் கொண்டிருந்தார். அந்த வாசிப்பில் ஒரு அமைதி இருந்தது; அந்த வீட்டின் சூழலையே மாற்றும் ஒரு நிம்மதி!

அந்த வீட்டில் இருந்த பேரன் இதை தினமும் கவனித்து வந்தான். ஆனால் இங்கு ஒரு வித்தியாசம் இருந்தது. தாத்தா, ஒவ்வொரு நாளும் பேரனை பார்த்து, “பைபிள் வாசிச்சியா?” என்று கேட்டுக் கொண்டே இருப்பார்.

முதலில் அது அவனுக்கு சாதாரணமாக தோன்றியது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, அந்த கேள்வி அவனுக்கு சலிப்பை ஏற்படுத்தியது. அவன் மனதில் ஒரு கேள்வி வளர்ந்தது.

ஒரு நாள், அவன் அதை வெளிப்படையாக கேட்டுவிட்டான்: தாத்தா, நீங்க தினமும் என்னைக் கேட்டுக் கொண்டே இருக்கிறீங்க. நீங்களே சின்ன வயசுல இருந்து இப்ப வரைக்கும் பைபிள் வாசிக்கிறீங்க. ஆனா அதுல உள்ள எல்லா வசனங்களும் உங்க மனசுல இருக்கலையே! அப்படின்னா தினமும் வாசிப்பதுக்கு என்ன பயன்?

அந்த கேள்வியை கேட்ட தாத்தா அமைதியாக சிரித்தார். உடனே பதில் சொல்லவில்லை. அருகில் இருந்த ஒரு பழைய, அழுக்கு நிறைந்த வாட்டர் பாட்டிலை எடுத்தார். அதை பேரனிடம் கொடுத்து, “இதுல போய் குழாய்ல (டேப்) தண்ணி எடுத்து வா” என்றார்.

பேரன் சற்றே குழப்பமடைந்தாலும், ஆர்வமாக அந்த பாட்டிலை எடுத்துக்கொண்டு ஓடினான். குழாயைத் திறந்தவுடன் தண்ணீர் வேகமாக பாய்ந்தது. அவன் பாட்டிலில் நிரப்ப முயன்றான். ஆனால் எவ்வளவு முயன்றாலும் தண்ணீர் உள்ளே தங்கவில்லை.

சில நிமிடங்கள் கழித்து அவன் கவனித்தான். அந்த பாட்டிலில் ஓட்டை இருந்தது. உடனே தாத்தாவிடம் திரும்பி வந்து, “தாத்தா, இந்த பாட்டில் ஓட்ட பாட்டில்! எவ்வளவு தண்ணி ஊத்தினாலும் அது உள்ள நிக்கவே இல்ல” என்றான்.

தாத்தா மெதுவாக கேட்டார்: சரி, தண்ணி நிக்கலன்னு சொல்றது உண்மைதான். ஆனா வேற ஏதாவது கவனிச்சியா?

பேரன் மீண்டும் பாட்டிலை பார்த்தான். முன்பு முழுக்க அழுக்காக இருந்த அந்த பாட்டில், இப்போது சுத்தமாக மாறியிருந்தது. அவன் அதிசயத்துடன் தாத்தாவை நோக்கினான்.

தாத்தா புன்னகையுடன் கூறினார்: பாட்டிலுக்குள்ள தண்ணி நிக்கல. ஆனா தண்ணி போக போக அந்த பாட்டில் சுத்தமா மாறி இருக்கு. அதுபோல தான் நாமும். நம்ம மனசு எல்லா வசனங்களையும் நினைவில் வைக்க முடியாது. அது நிதரிசனமான உண்மை தான்.

அவர் சிறிது நேரம் நின்று தொடர்ந்தார்: ஆனா தினமும் வேதத்தை வாசிக்கிறபோது, அந்த வசனம் நமக்குள் வேலை செய்யுது. அது நம்ம எண்ணங்களையும் மனதையும் சுத்தமாக்குது. நம்மை அறியாமலேயே கொஞ்சம் கொஞ்சமாக நம்மை மாற்றிக்கொண்டே இருக்கும்.

பேரனின் முகத்தில் ஒரு புதிய புரிதல் தோன்றியது.

தாத்தா மெதுவாக முடித்தார்: நான் வாசிப்பது எல்லாத்தையும் நினைவில் வைக்க மட்டும் இல்ல, நான் தினமும் கொஞ்சம் கொஞ்சமாக பரிசுத்தமாக மாறணும்னு வாசிக்கிறேன். அதனால்தான் உன்னையும் கேட்கிறேன்.

அந்த நாளிலிருந்து, தாத்தா கேட்ட கேள்வி அவனுக்கு சலிப்பாக இல்லாமல், ஒரு அழைப்பாக மாறியது. அவன் புரிந்துகொண்டான். வேதாகமம் வாசிப்பது நினைவில் வைப்பதற்காக மட்டும் அல்ல, வாழ்க்கையை மாற்றுவதற்காக'

அன்பு தம்பி தங்காய், நாம் தினமும் குறைந்தது மூன்று வேளை சாப்பிடுகிறோம் அப்படித்தானே?, அதுபோல உங்கள் மனசுக்கும் ஆத்தும உணவு தேவை. அந்த உணவு தான் பைபிள் வாசிப்பு.

நீங்க எல்லா வசனங்களையும் உடனே நினைவில் வைக்க முடியாமலிருக்கலாம், அதுல பிரச்சனை எதுவும் இல்ல. ஆனா தினமும் ரெகுலரா வாசிக்க ஆரம்பிச்சிட்டீங்கனா, அது உங்கள் மனசை சூப்பரா மாற்றும். நல்ல பிள்ளைகளாக, அன்பானவர்களாக, கடவுளுக்கு பிடித்தவர்களாக வளர உதவும்.

நினைவில் வைங்க, பைபிள் வாசிப்பது ஒரு கடமை இல்ல, அது ஒரு பெரிய ஆசீர்வாதம்! எனவே இன்றே ஆரம்பிங்க நாளை நீங்கள் மாறியிருப்பீர்கள்!

'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.' (சங்கீதம் 119:105)

இந்த மாத சிறுவர் பகுதி உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்களது மேலான கருத்துக்களையும், சாட்சிகளையும் 9750381784 என்ற வாட்சாப் எண்ணிற்கு தெரியப்படுத்தலாம். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான ஸ்டோரியோடு உங்களை மீட் பண்ணுறேன். டாட்டா.

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# காலத்தை பிரயோஜனப்படுத்துங்கள்

## MAKE IT USE OF TIME

**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் (எபேசியர் 5:16).**

காலத்தைப் பிரயோஜனப்படுத்துதல் என்பது ஏதோ பள்ளிக்கூட அல்லது கல்லூரி படிப்பு நேரங்களை மட்டும் உள்ளடக்கியது அல்ல. விடுமுறை காலங்களையும் உள்ளடக்கியது என்பதை நாம் புரிந்து கொள்வது நல்லது. நாம் தான் விடுமுறையை ஏற்படுத்தி இருக்கிறோமே தவிர, காலம் ஒருபோதும் விடுமுறை எடுப்பதில்லை, கொடுப்பதுமில்லை. காலம் ஒரே போல ஓடிக்கொண்டே தான் இருக்கிறது. ஆகவே, விடுமுறையை சரியாகப் புரிந்துகொண்டு, அதை பயன்படுத்துவோமானால், விடுமுறை ஆசீர்வாதமானதே.

### விடுமுறை நாட்கள்: HOLIDAYS

பரபரப்பான வழக்கமான செயல்களில் இருந்து, சற்று ஒதுங்கி இருப்பதற்காக ஒதுக்கும் நாட்களே விடுமுறை நாட்கள் ஆகும். விடுமுறை நாட்கள் என்றால் ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருப்பது என்று பொருளல்ல. முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்.

**விடுமுறை என்பது செய்யும் வேலையை மாற்றி,**
**வேறு வேலைகளில் ஈடுபடுவது தானேயன்றி, சும்மா இருப்பது அல்ல.**

### விடுமுறையில் என்ன செய்யலாம்? WHAT TO DO ON VACATION?

#### 1. பெற்றோருக்கு உதவி: HELP YOUR PARENTS

வீட்டில் இருக்கும் வீட்டு வேலைகளில், தொழில் சம்பந்தப்பட்ட வேலைகளில் பெற்றோருக்கு உதவியாக இருந்து உடன் வேலை செய்வது அவர்களை சந்தோஷப்படுத்தும்.

#### 2. திறமையை வளர்த்துக் கொள்ளுதல்: DEVELOP YOUR SKILLS

உங்களுக்குள் தேவன் கொடுத்திருக்கிற திறமைகளைக் கண்டறிந்து அதை வளர்த்துக் கொள்ள இந்த விடுமுறை நாட்களில் கூடுதல் நேரத்தைச் செலவிடலாம். **Music, Singing, Typing, Drawing** போன்று இன்னும் பல உண்டு. உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள முயற்சி எடுங்கள்.

#### 3. விடுமுறை விடுமுறையே: HOLIDAY IS A HOLIDAY

விடுமுறையில் உங்கள் குடும்ப சூழலுக்கு ஏற்றாற்போல், பெற்றோரோடு இணைந்து புதிய இடங்களுக்குச் சென்று வருதல் (TOUR), குடும்ப உறவினர்களைச் சந்தித்து வருதல் போன்ற காரியங்கள் மனதிற்கு மகிழ்ச்சியையும், புத்துணர்ச்சியையும் கொடுக்கும்.

#### 4. ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி: GROW IN YOUR SPIRITUAL LIFE

விடுமுறை நாட்களை உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவாக பயன்படுத்துங்கள். கூடுதல் நேரம் எடுத்து வேதம் வாசியுங்கள். முடிந்தால் புதிய

ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களையும் இந்த விடுமுறையில் படித்து முடிப்பது என தீர்மானித்து வாசிக்க ஆரம்பியுங்கள். புதிய ஏற்பாட்டில் மொத்தம் 260 அதிகாரங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு 9 அதிகாரங்கள் வாசித்தால் 30 நாட்களுக்குள் முழு புதிய ஏற்பாட்டையும் வாசித்து முடித்து விடலாம். ஜெபத்திற்கு நேரம் ஒதுக்குங்கள். கூச்சப்படாமல் ஜெபிக்கப் பழகுங்கள். புதிய கல்வியாண்டின் ஆசீர்வாதத்திற்காக ஓரிரு நாட்கள் உபவாசித்து ஜெபம் செய்யுங்கள். உங்கள் மண்டலத்தில் நடைபெறும் மாணவர் சீஷத்துவ பயிற்சி முகாமில் (SFC CAMP) பங்குபெற்று ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவான காரியங்களைக் கற்றுக் கொள்ளுங்கள்.

**5. சபைக்கு உதவியாக இருங்கள்: HELP YOUR CHURCH**

நீங்கள் பங்குபெறும் சபையில் இந்த விடுமுறை நாட்களில் நடைபெறும் ஊழியங்களில் பங்குபெற்று உதவி செய்யுங்கள். குறிப்பாக சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி **(AGVBS)**. மேலும், சபைக்கு அடுத்த எந்த காரியத்தில் உங்களால் உதவி செய்ய முடியுமோ, உதவியாக இருந்து செயல்படுங்கள். அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

விடுமுறை நாட்களில் தேவையில்லாமல் வீணாக நேரத்தை செலவிடாமல் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். காரணம், **காலம் பேசாது, ஆனால் எல்லாவற்றிற்கும் காலம்தான் பதில் சொல்லும்.**

---

## HOW TO KNOW GOD'S WILL?

There are five specific ways in which God guides us. It is listed below in their order of importance.

1. **Commanding Scripture:** It means that believers are to be informed by the worldview and values contained in God's Word. God will never guide us to do things that contradict His Word.
2. **Compelling Spirit:** This implies that we have sufficient spiritual maturity to be able to discern the difference between the guidance or prompting of God's Holy Spirit and our personal feelings. Just because we feel something doesn't mean that God is behind it or in it.
3. **Common Sense:** a reminder of the important difference between authentic faith and naive credulity. God gives us common sense for a reason. It's important that we make good use of it.
4. **Counsel of the Saints:** Like it says in Proverbs 15.22, "Plans fail for lack of counsel, but with many advisers they succeed." It's never a bad idea to seek the wisdom of mature believers when we're considering a course of action.
5. **Circumstantial Signs:** A lot of folks seem to think that the main way God speaks to us is through circumstantial signs. In fact, it's number five, at the bottom of the list, for a reason. Our circumstances can sometimes flat out contradict God's will for our lives. Remember how in the psalms David wonders why the wicked prosper, while Job wonders why he's suffering despite his having lived an upright life? We live in a fallen world and life isn't always fair. So while circumstantial signs sometimes may be a way God guides us, they are not necessarily the chief or most important way. Rather than focusing on signs, really get to know your Bible, be open to the guidance of God's Holy Spirit, use your common sense, and seek the counsel of the saints.



# கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது!

**Rev. S.P. ராஜசெல்வம்**
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். மீண்டும் இந்த இதழ் வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சங்கீதம் 29:4 ல் நாம் வாசிக்கிறோம், கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது. இன்றைய சிறுவர்கள் உலகில் பல சத்தங்களை கேட்டு வளர்கிறார்கள். ஆனால் மிக முக்கியமாக கேட்க வேண்டிய ஒரு சத்தம் கர்த்தருடைய சத்தம். வேதத்திலே சாமுவேல் சிறுவயதிலே ஆண்டவருடைய சத்தத்தை கேட்டான். அதுபோல இன்றைய சிறுவர்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்க அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்டு வளருவார்கள். கர்த்தருடைய சித்தத்தை செய்வார்கள்.

### 1. சிறுவர்கள் கேட்கிற சத்தம்

இன்று சிறுவர்கள் பல சத்தங்களை கேட்கிறார்கள்.

➤ இடிமுழக்க சத்தம் ; ➤சிங்கம் கர்ஜிக்கும் சத்தம்; ➤அப்பா அல்லது அம்மா கூப்பிடும் சத்தம்; ➤பள்ளி மணி அடிக்கும் சத்தம்; ➤மொபைல் சத்தம். சில சத்தங்கள் நம்மை பயமுறுத்தும், சில சத்தங்கள் நம்மை சந்தோஷப்படுத்தும். ஆனால் உண்மையாக தேவனுடைய சத்தத்தை அவர்கள் கேட்டு பழகுகிறார்களா? இன்று நாம் பார்க்கப்போகும் வசனம் சத்தத்தை என்ன சொல்கிறது என்றால், **கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது**. அதாவது தேவனுடைய சத்தம் மிகுந்த சக்தியுள்ளது! .

### 2. கர்த்தருடைய சத்தம் என்றால் என்ன?

கர்த்தருடைய சத்தம் என்பது தேவன் பேசும் வார்த்தை. தேவன் எப்படி பேசுகிறார்? வேதாகமம் மூலமாக பேசுகிறார், ஜெபத்தில் நம்முடைய இருதயத்தில் பேசுகிறார், ஆவியானவர் வழியாக எச்சரிக்கிறார். ஆசிரியர்கள், பெற்றோர் மூலமாக ஆலோசனை தருகிறார். அதனால் வேதாகமம் வாசிக்கும்போது அது சாதாரண புத்தகம் இல்லை. தேவன் நம்மோடு பேசுகின்ற புத்தகம்.

### 3. தேவனுடைய சத்தம் வல்லமையுடையது (Powerful Voice)

தேவனுடைய வார்த்தை சக்தியுடையது என்பதை நாம் பல இடங்களில் பார்க்கலாம்.

**(A) தேவன் பேசினார்** – உலகம் உருவானது. ஆதியாகமம் 1-ல் தேவன் சொன்னார்: ஒளி உண்டாகக்கடவது; உடனே ஒளி உண்டானது. அவர் பேசினால் போதும்! உலகமே உருவாகும்!

**(B) இயேசு பேசினார்** – காற்றும் கடலும் அமைதியானது. ஒரு நாள் சீஷர்கள் படகில் போகும்போது புயல் வந்தது. அவர்கள் பயந்து “நாங்கள் அழிந்து போகிறோம்” என்றார்கள். ஆனால் இயேசு சொன்னார் இரையாதே, அமைதிலாயிரு என்று சொன்னபோது உடனே கடல் காற்று அமைதியானது. லாசரு என்ற வாலிபர் மரித்துவிட்டார். அவரை கல்லறையில் வைத்தார்கள். இயேசு அங்கே வந்து சொன்னார். லாசருவே, வெளியே வா!. உடனே லாசரு உயிரோடு வெளியே வந்தான். இதுதான் தேவனுடைய சத்தத்தின் வல்லமை!.

**4. தேவனுடைய சத்தம் மகத்துவமுடையது (Majestic Voice)**

மகத்துவம் என்றால் என்ன?

அது பெருமை, உயர்வு, மாட்சிமை என்று அர்த்தம். தேவனுடைய சத்தம் மனிதனுடைய சத்தம் போல இல்லை. அதிகாரமுள்ள சத்தம். எல்லாவற்றையும் மாற்றக்கூடிய சத்தம். அவர் பேசினால் பயம் நம்பிக்கையாக மாறும்.

**5. இன்றைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களாகிய நாம் சிறுவர்களை எப்படி தேவனுடைய சத்தத்தை அவர்கள் கேட்க வேண்டும் என்று பயிற்றுவிப்பது?**

(A) சிறுவர்களுக்கு தேவனுடைய சத்தத்தை அறிமுகப்படுத்துங்கள். குழந்தைகளுக்கு வேதாகமத்தை கதை போல அல்ல, தேவன் பேசும் வார்த்தை என்று சொல்லி கற்றுக்கொடுங்கள்.

(B) வசனங்களை மனனம் செய்ய ஊக்குவியுங்கள். இந்த வசனத்தை குழந்தைகளுக்கு மனனம் செய்ய உதவி செய்யுங்கள்: கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது.

(C) குழந்தைகள் ஜெபத்தில் பேசுவதோடு கேட்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெபம் என்பது கேட்பதும் ஆகும். ஜெபத்தில் தேவனிடம் பேசுங்கள். பிறகு அமைதியாக இருந்து தேவன் என்ன பேசுகிறார் என்று கேளுங்கள் பிள்ளைகளுக்கு சொல்லுங்கள்:

**6. சிறுவர்களை தினமும் இந்த ஜெபத்தை ஏறெடுக்க செய்யுங்கள்**

கர்த்தாவே, உமது சத்தம் வல்லமையுள்ளது என்று நாங்கள் அறிகிறோம். நாங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது நீர் பேசுகிறீர் என்பதை புரிந்துகொள்ள உதவி செய்யும். உமது வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க எங்களை பலப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

தேவன் பேசும்போது கவனமாகக் கேட்க வேண்டும். வேதாகமம் வாசிக்கும்போது, தேவாலயத்தில் செய்தி கேட்கும்போது, ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் கற்றுத் தரும்போது. "தேவனே, நீர் என்னிடம் பேசுகிறீர்" என்று நினைக்க வேண்டும்.

தேவனுடைய சத்தத்தை கேட்க தினமும் நேரம் கொடுக்க வேண்டும். தினமும் 5 நிமிடம் வேதாகமம் வாசிக்க, தினமும் ஜெபிக்க,பாடல்கள் பாடி தேவனைத் துதிக்க அப்போது தேவனுடைய சத்தம் அவர்களுக்கு தெளிவாக கேட்கும்.

இதை கற்றுக் கொடுப்பது மட்டுமல்ல, தினமும் அவர்களிடம் தேவன் இன்றைக்கு உன்னோடு பேசினாரா? என்ன பேசினார்? அவருடைய சத்தத்தை கேட்டாயா? என்று கேள்வி எழுப்பி அவர்கள் ஆண்டவர் சத்தத்தை கேட்க, கேட்ட காரியத்தை வெளிப்படுத்த பக்குவப்படுத்துங்கள்.

இந்த வாரம் தேவன் உங்களுக்கு என்ன சொல்லுகிறார்? குழந்தைகள் பதில் சொல்லச் செய்யுங்கள்: பொய் சொல்லாதே; ஜெபி; பிறரை நேசி, அப்பா அம்மாவுக்கு கீழ்ப்படி, என்பதை வைத்து தேவனுடைய சத்தம் கேட்டு சித்தம் செய்ய பிள்ளைகளை கர்த்தரிடம் நடத்துவோம்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து சிறு பிள்ளைகள் சிறுவயதிலே தேவனுடைய சத்தம் கேட்டு வளர உதவி புரிவாராக ஆமென்.... God Bless you.

# சபையில் எப்படி நடந்து கொள்வது?

**1. சபை ஒரு குடும்பம் (எபேசி 3:15; 4:6)**

ஆகவே நாம் ஒருவரை ஒருவர் நம்புவதுடன், ஒருவரை ஒருவர் மதித்தும், (ஒத்துழைத்தும்) வாழ வேண்டும்.

**2. சபை ஒரு ஐக்கியம் (அப் 2:42-45 ; 1 யோவான் 1:3)**

ஆகவே நாம் நம்முடைய செல்வங்களையும் மற்ற ஆசீர்வாதங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்தும் மற்றவர்களின் பிரச்சனைகளிலும், துன்பங்களிலும் தாங்கவும் வேண்டும்.

**3. சபை ஒரு சரீரம் (1 கொரி 12:12,17 ; எபேசி 4:16)**

ஆகவே அவயவங்களாகிய நாம் சுயநலமில்லாமல் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்வதுடன், அன்புடனும் இரக்கத்துடனும் பலவீனமானவர்களுக்கு உதவ வேண்டும்.

**4. சபை ஒரு கட்டிடம் (எபேசி 2:19-22 ; 1 கொரி 3:9)**

ஆகவே ஜீவனுள்ள கற்களாகிய நாம், தேவன் நம்மை வைத்துள்ள இடத்தில் தாழ்மையுடனும், மகிழ்ச்சியுடனும், யாரையும் வெறுக்கமாலும் தற்பெருமை கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

**5. சபை ஒரு பள்ளி (எபேசி 3:18,19 ; 4:11-14)**

ஆகவே நாம் தேவனை அறியும் அறிவில் வளரவும், பூரண புருஷராகவும் பரிசுத்தவான்களின் கூடுகையைத் தவிர்த்தல் கூடாது.

**6. சபை ஒரு மந்தை (1 பேதுரு 2:25 ; 5:2-5)**

ஆகவே நாம் தன்னிச்சையாக செயல்படாமல், மற்றவர்களைச் சார்ந்தும், நாம் எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைப்பதுடன், நம் ஆத்தும மேய்ப்பரைப் பின் தொடர வேண்டும்.

**7. சபை ஒரு வீடு (1 தீமோ 3:15 ; எபி 3:6)**

ஆகவே அவ்வீட்டிலுள்ளோரை தேவன் ஆசீர்வதிக்கும் பொருட்டு கிறிஸ்துவை அறியும் அறிவாகிய சுகந்த வாசனையால் அதை நிரப்ப வேண்டும்.

**8. சபை ஒரு பண்ணை (1 கொரி 3:9 ; எபி 6:7-12)**

ஆகவே நாம் அதிக கனி தரும் பொருட்டு பரிசுத்த ஆவியானர் அதிகமதிகம் ஊற்றப்பட்ட அனுபவத்தைப் பெற வாஞ்சிக்க வேண்டும்.

**9. சபை ஒரு சேனை (எபேசி 6:12 ; 2 கொரி 10:3-6 )**

ஆகவே நாம் சத்துருவின் தாக்குதலுக்குக் கவனமாயிருந்து, சாத்தானுடைய கட்டுகளிலிருந்து மக்களை விடுவிக்க ஒற்றுமையுடனும், தைரியத்துடனும் வீர நடைபோட வேண்டும்.

**10. சபை ஒரு விளக்கு (மத் 5:14-16 ; பிலிப் 2:14-16)**

ஆகவே நாம் இவ்வுலகிற்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, உலகின் ஒளியான இயேசுவுக்கு தொடர்ந்து சாட்சி பகர்ந்து இருளை அகற்ற வேண்டும்.

## போட்டி எண் : 16 (சரியான விடைகள்)

| | தகப்பன் | | குமாரன் |
|---|---|---|---|
| 1. | மீகா | - | மத்தனியா (நெகே.11:22). |
| 2. | யெசுவா | - | யோசபாத் (எஸ் 8:33). |
| 3. | சிக்ரி | - | யோவேல் (நெகே.11:9). |
| 4. | உரியா | - | மெரேமோத் (எஸ்.8.33) |
| 5. | சாதோக் | - | மெசுல்லாம் (நெகே.11:11). |
| 6. | அராயா | - | ஊசியேல் (நெச.3:8). |
| 7. | செயல்தியேல் | - | செருபாபேல் (எஸ்.3:2). |
| 8. | எலியாசிப் | - | யோகனான் (எஸ்.10:6). |
| 9. | மல்கியா | - | பஸ்கூர் (நெகே.11:12). |
| 10. | ஆசகேல் | - | யோனத்தான் (எஸ்.10:15). |
| 11. | ஊர் | - | ரெப்பாயா (நெகே.3:9). |
| 12. | கொல்லோசே | - | சல்லூம் (நெகே.3:15). |
| 13. | ஆசாப் | - | சக்கூர் (நெகே.12:35). |
| 14. | அத்தோ | - | சகரியா (எஸ்.5:1). |
| 15. | செராயா | - | எஸ்றா (எஸ்.7:1). |
| 16. | திக்கா | - | யக்சியா (எஸ்.10:15). |
| 17. | சாபா | - | பாரூக் (நெகே.3:20). |
| 18. | அகலியா | - | நெகேமியா (நெகே.1:1). |
| 19. | பின்னூய் | - | நொவதியா (எஸ்.8:38). |
| 20. | தெலாயா | - | செமாயா (நெகே.6:10). |
| 21. | பெல்லியா | - | எரோகாம் (நெகே.11:12). |
| 22. | ஆராக் | - | செகனியா (நெகே.6:18). |
| 23. | ஆசாப்நெயா | - | அத்தூஸ் (நெகே.3:10). |

## போட்டி எண் : 16 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை** : பெனிட்டா; மரகதம்; குளோரி; சித்ரா பிளஸ்சி; சாந்தி; C.பெனிட்டா; கிரிஜா; கனகவல்லி; V.மகேஷ்வரி; விஜி; பிரபா; பியூலா; இவாஞ்சலின்; முத்துகோபால்; லீதியாள்; எஸ்தர் கலா; M.சுமதி; ராதாமணி; மாது; பிரியா; கோகிலா; டோரா; பிரேமலதா; தனபாக்கியம்; J. சுமதி; M. எஸ்தர்; S.முத்துலெட்சுமி; புஷ்பவல்லி; T.கலா; E.கலா; ஜெயசிலின்; ராணி பிளசிங்; கிறிஸ்டி; K.மகேஷ்வரி; பிரின்ஸி ஜெனிபர்; மயில்; |**ஆறுமுகநேரி**: ஜாய்ஸ்மேரி; ஜேம்ஸ் நித்யா; பாக்கியா; மகிமா சகாயராஜ்; பனிமலர்; செல்வபிரியா; ஜோதி மீனா; சுமதி; சிவகாமி எஸ்தர்; திருமலை செல்வி; சரோஜா குமார்; லோசினி; அனிதா; கனிஷா மெர்டன்; ஜெயா; வெண்ணிலா எஸ்தர்; ஜூலியட்; அன்சிரத்னம்; | **ஸ்ரீவில்லிபுத்தூர்**: வசந்தா; மெசி; அபிராமி; வசந்தா; வெங்கடவள்ளி; நெல்சன் செல்வராஜ்; ஜான் பீட்டர்; கிருபா; சிவரஞ்சனி; பாஞ்சாலி; அழகு நாச்சியார்; காபிரியேல்;| **திருச்சி**: ஸ்டான்லி; மெர்சி சந்திரகலா; ஜேஸ்பின் உஷாராணி; ஜீலா கிரேஸ்; R.சாந்தி; பிரிஜிட் சகாயராஜ்; கிறிஸ்டி மகாலட்சுமி; மோனிகா சாமுவேல்; வசந்தி முத்து; A.சாந்தி; வனத்துமேரி; | **கோயம்புத்தூர்**: இந்திராணி; மேரி டென்சில்; ரெஜினாள் மாணிக்கம்; ரத்தினம்; இசையரசன்; திலகம்; கிறிஸ்டினா ரகுநாத்; நிர்மலா; கிறிஸ்டினா அபிகாயில்; |**இராதாபுரம்**: ஜெயா சாரோன்; ஜெமிமா சாமுவேல்; பிரகாசியம்மாள்; அருள்செல்வி; மரகதம்; பிரியா; நித்யா; மல்லிகா; ஜெயா; | **கடையநல்லூர்**: வினோலியா; டேவிட் வெள்ளத்துரை; தங்கராஜ்; சத்யா சுரேஷ்; ஸ்டெல்லா; தனம்; ஆஷாதேவி; ஹேமா; விக்டோரியா குணா; |**எடப்பாடி**: ஜோசப் மேரி; கவின்; சத்யாமூர்த்தி; மல்லிகா; ரூத் போவாஸ்; அஞ்சலி அரசு; ஹெப்சிபா ஜோயல்; மாலதி சுரேஷ்; | **சேத்துபட்டு**: மெர்சி; மாதரசி; லஷ்மிகந்தா; மரகதம்; ஜெயராணி; ரெக்ஸி ஈஸ்வரன்; ஷாலினி; சுகந்தி பெனடிக்; |**தேனி**: J.மேரி; கார்த்திகேயாயினி; கிருபா; பூமணி ஜான்சி; திரவியச் செல்வி; தனம்; செண்பக புஷ்பா; லீலாவதி; |**மடத்துக்குளம்** : கிரேஸ்மேரி; சரண்யா; C.பரிமளா; ஏர்ணஸ்ட் எபினேசர்; ரூத்; ஜெனிட்டா ஜூலியட் மேரி; சேர்மக்கனி; ஸ்டெல்லா மேரி;| **ஆண்டிபட்டி**: அருணாதேவி; எஸ்தர்ராஜி; குளோரி லதா; யுகஸ்ரீ; அமலி ஜான்சி; தேவபாக்கியம்;

## போட்டி எண் : 16 (சரியான விடை எழுதியவர்கள்...)

ரோஸ்லின் சசிகலா; பூங்கொடி; |**உடுமலைப்பேட்டை**: புஷ்பா எட்வர்ட்; வசந்தி சாமிநாதன்; சுகந்தி; ஆக்னஸ்; சந்தனா மதன்; ஜெயந்தி; சூசன்னாள்; |**மதுரை**: பரிமளா; கணபதி; கனகவல்லி; ஸ்வீட்டி கரோலின்; சித்ரா; கீர்த்தனா ரூபன்; P.சாந்தி; | **தூத்துக்குடி**: சுகந்தி ஜீசஸ்; ஜாய் செல்வி; K.இவாஞ்சலின்; K.பாக்கியம்; எப்சி; சந்தன புஷ்பம்|**நெல்வாய்**: நர்மதா ஸ்ரீ; அருணா; மலர்விழி; கேத்ரின்; கற்பகம்; ஜெயசீலன்; தாட்சியாணி; |**ஆலங்குளம் (வி)**: மரியாள்; ஸ்டெல்லா; ரெஜினா சாரு; பிளாரன்ஸ்; உமா ரோஸ்லின்; |**திருநின்றவூர்**: தெரசா; ரோஸ்லின் மேரி; ஆனி ஐசக்; எஸ்தர் பவானி; எழிலரசி; |**உவரி**: எமல்டா; மைக்கேல்; ஜெரால்டின்; சௌமிளா; ஹெலினா; |**கள்ளக்குறிச்சி**: பத்மாவதி; யெஷீரன் சாம் ஜெபகனி; மகேஸ்வரி; தங்கம் சாக்கோ; பத்மாவதி; கிருபாஸ்ரீ; |**நாகமலை**: விஜிலா; ஆனந்தி; **உக்கிரன்கோட்டை**: ருக்குமணி ஜெயராஜ்; குழந்தை திரசம்மாள்; அன்னபாப்பு; முத்துசெல்வி;| **பாளையங்கோட்டை**: எஸ்தர் ஜான்ராஜ்; கலா பிரசாத்; சாந்த குமாரி; உமா மகேஷ்வரி (ஹெப்சிபா); **கோவில்பட்டி**: வால்டர்சிங்; மரியாள் ஜெயசீலி; ரேச்சல்; செல்வின் பால்; | **நத்தகாடையூர்**: சரளா தேவி; ஏசையன்; செல்வி; சங்கீதா; |**கவரைப்பேட்டை** : இவாஞ்சலின்; சலோமி; புவனா; தங்கம்; | **கொக்கராயன்பேட்டை**: மாலதி; ஷாலினி அக்ஷயா; | **கொங்காந்தான்பாறை** : சந்திரா ஆல்பர்ட்; மேரி பொன்னுத்தாய்; பவித்ரா; |**நாகலாபுரம்**: லில்லி ஜெனட் தங்கம்; ஷாலோம் இன்பென்ட் சுஜாந்த்; குளோரி அம்மாள்; |**ராமன்புதூர்**: அன்னம்மாள்; ஜான்சி ராணி; லீதியாள்; |**வில்லியனூர்**: புரோனிக்கா; ராஜ்; செல்லப்பன்; |**கரூர்**: நிவேதா; நிவாஷ்; ஜெயந்தி தாமஸ்; |**புளியங்குடி**: ஜெபஞானம்; சுந்தரி; ஜெயமணி; |**அச்சரப்பாக்கம்**: செல்வகுமாரி; விஷ்னுபிரியா; திரேசா; |**வேலூர்**: செல்வநாயகம்; சரோஜினி; உஷா; | **நாகப்பட்டினம்**: வின்சென்ட் ராஜ்; கவிதா; |**மதுராந்தகம்**: ரேணுகா; சுனிதா; |**நாகர்கோவில்**: டெய்சி பொன்ராஜ்; அனிஷா; |**வில்லிவாக்கம்**: ஜேஸ்மின் திலகர்; மணிமேகலை மார்க்கிரேட்; | **கொந்திமங்கலம்**: மேரி குணவதி; உமா தேவஜோதி; |**பழையகாயல்**: எலிசபெத்; கிறிஸ்டி சாத்ராக்; |**சுரண்டை**: ஜெயமேரி: ஜீவா; குளோரி ஞானம்; |**களக்காடு**: சாந்தி; விமலா டேனியல்; | **நாசரேத்**: மெர்சி; தாசன் மோசஸ்; |**பரமத்திவேலூர்**: திருச்செல்வி; பாமா ; |**ஆம்பூர்**: கிரிஜா சத்தியா; ரூபி மனோகரன்; |**வெள்ளக்கால்**: ஸ்டெல்லா மேரி; கலா சுரேஷ்; |**ஓசூர்**: மார்கஸ் ரிச்சர்டு; ஜெமிந்தா; |**திருநெல்வேலி**: சுகுணா ரூபி; ரெஜினா அமல்ராஜ்; |**வீரபாண்டிய பட்டிணம்**:சுகிர்தா டைட்டஸ்; தேவதாஸ்; |**சென்னை**: மெர்லின் ஹெலன் பிரிதியா;| **மேல அனுப்பானடி** : ஜெயா; அனிதா; |**சாத்தூர்**: விசித்ரா; முத்துலெட்சுமி; |**வேப்பம்பட்டு** : ஜோஸ்மேரி; ஆர்த்தி; |**கோட்டையூர்**: சலோமி ரமேஷ்; பிரேமா; | **இளையரசனேந்தல்**: ஜோன் ஆப் ஆர்க்; மெர்சி அகஸ்டா; | **கூத்தாநல்லூர்**: கிளமாண்டின்; S.A.M.பாண்டியன்; |**திரேஸ்புரம்**: புருசிமா; சில்வெஸ்டர்; |**டெலானியூர்**: ஜெயந்தி; ஜாக்லின்; |**போர்ட் பிளேர்**: விஜய்;| **பசுவந்தனை**: கிருபா ஜெப்ரி; |**குற்றாலம்**: வேளாங்கனி: **திருமழபாடி**: லீலா ரோஸ்லின்;| **கழுகுமலை**: சுகிர்தவல்லி; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**உசிலம்பட்டி**: லீலாபாய்;| **ஏர்வாடி**: மரகதம்; |**பெரியநாயக்கன்பாளையம்** : ரெயின் பெசலேயல்; |**பாவூர்சத்திரம்**: ஜெசிலி;|**எழில்நகர்**: பிரியா; |**அரகூர்**: ரோஸ்லின் சாந்தி; |**காசிமேஜர்புரம்** : ரூத்; |**இலஞ்சி**: ஆன்ட்ரு தேவகி; | **K.P.வலசை**: A.P.சீலி; |**மடத்தூர்**: ராதாமணி; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்; | **அச்சிறுப்பாக்கம்**: தமிழ்செல்வி; |**வளசரவாக்கம்**: ஜெபசெல்வி தனராஜ்; |**அரியலூர்**: நியூஜிலின்; |**குரோம்பேட்டை** : கோமதிகுமார்; | **காமராஜபுரம்**: மரகதலீலா; |**அரூர்**: சங்கீதா; | **சிட்லபாக்கம்**: ரெபெக்காள்; |**தஞ்சாவூர்**: தேவகுமார்; |**மூலைக்கரைபட்டி**: தமிழ்செல்வி; | **வத்ராப்**: ஜெபராணி; |**அய்யம்பாக்கம்**: அம்மணி; | **திருக்கழுன்குன்றம்**: ரிஷி மீனா; |**வீராணம்**: எப்சிபா; **நொளம்பூர்**: ஹில்டா எலிசபெத்; |**பள்ளிக்கரணை**: புவனேஸ்வரி; |**கடாட்சபுரம்**: ரேவதி கில்பர்ட்; திசையன்விளை: செல்வபாக்கியம்; |**ஆழ்வார்திருநகரி**: பனிமலர்;| **ஏழாயிரம்பண்ணை**: ஜாய்; | **T.N.பாளையம்**: ஜெப்ரின் ஜெர்லின்; |**கல்லல்**: அபிஷாக்;| **முத்தியால் பேட்டை**: அபிஷா சுமதி; |**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; |**விருதுநகர்**: சாமுவேல்;| **மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; | **விழுப்புரம்**: வசந்தா; |**கீழரசூர்** : வசந்தி; |**புதுக்கோட்டை**: லலிதா; |**கிருஷ்ணகிரி**: ரேச்சல் அனுஷ்யா; |**கூவத்தூர்**: எட்வர்ட்; |**கடலையூர்** : ஆபிரகாம் எஸ்தர்; |**தர்மபுரி**: ரூத்; |**ஆழ்வார்குறிச்சி**: ஹரிலீலா: |**கல்லிடைக்குறிச்சி**: ஜெப்ரோனிக்கா; | **பழனி** : சாந்தி; **பெருங்குளம்** : பியூலா: **மேட்டூர்**: பத்மினி ஸ்டீபன்;

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-17
## எஸ்தர், யோபு 1-10 அதிகாரங்கள்; (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. எனக்கு --------- பண்ணுங்கள் நான் மவுனமாயிருப்பேன்.
2. தேசத்தின்மேலும் சமுத்திரத்திலுள்ள தீவுகளின் மேலும் பகுதி ஏற்படுத்தியவன் யார்?
3. கர்த்தர் --------- கர்த்தர் ---------
4. மொர்தெகாய்க்கு முன்பாக நீர் தாழ்ந்துபோகத் தொடங்கினீர் என்று கூறிய பெண் யார்?
5. --------- நாணல் ஓங்கி வளருமோ?
6. ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கைபோட வகை தேடினவர்கள் யார்? யார்?
7. மனுஷன் --------- அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்.
8. ராஜ சமூகத்தில் இருக்கிற பிரதானிகளில் ஒருவனாகிய இவன் யார்?
9. --------- விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்.
10. யாவீரின் குமாரனாகிய இவன் யார்?
11. நான் ---------? நான் --------- ?
12. யூதாவின் ராஜாவாகிய இவன் யார்?
13. தேவனைத் --------- ஜீவனை விடும்.
14. அபியாயேலின் குமாரத்தியாகிய இவள் யார்?
15. என் கதறுதல் --------- புரண்டு போகிறது.
16. மகா ரூபவதியாயிருந்த ராஜ ஸ்திரீ யார்?
17. நான் --------- எனக்கு ஐயோ!
18. யூதரையெல்லாம் சங்கரிக்க வகை தேடியவன் யார்?
19. உலகம் --------- கையில் விடப்பட்டிருக்கிறது.
20. மொர்தெகாயின் வார்த்தைகளை எஸ்தருக்கு அறிவித்தவன் யார்?

---

குறிப்பு: விடையை புத்தகத்தில் எழுதி அனுப்பாமல் தனியாக பேப்பரில் எழுதி அனுப்பவும்

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.6.2026



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## Bible College Teachers' Seminar-Kodaikanal





## ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE பட்டமளிப்பு விழா–புதுச்சேரி











## திரித்துவ வேதாகமக் கல்லூரி பட்டமளிப்பு விழா–செங்கோட்டை









Registered News Paper Regd. No. 8206 / 62

## AGTBC பட்டமளிப்பு விழா–மதுரை












## MABC பட்டமளிப்பு விழா–சென்னை










**BOOK POST**

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664